குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - ஆனி - 10—7—71 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## திருமஞ்சனம்

பெறுதற்கரிய மானுடப் பிறப்பைப் பெற்றோர், அதனால் அடைதற்குரிய நன்மை, 'உடல் நலம், உயிர் நலம்' என இரண்டாகும். உடல் நிலையற்றது ஆதலின், அதனைப்பற்றி வரும் நலமும் நிலையற்றதே. உயிர் நிலையானது ஆதலின், அதன் நலமே நிலையானது. எனவே, மக்கள் யாவரும் உடல் நலத்தைவிட உயிர் நலத்தையே பெரிதாகக் கருதி அதனை அடைய முயலுதல் வேண்டும். என்றாலும், இத்தகைய எண்ணம் தோன்றப் பெறுவோர் உலகத்து அரியர். உடல் நலத்தை விரும்பாதவர் உலகில் இல்லை.

உடல் நலமும் நேரிய வழியில் பெறும்பொழுதே உண்மை நலமாம். நேர்மை யல்லாத வழியில் அடையப் பெறும் நலம் முதலில் நன்மைபோலத் தோன்றினாலும், பின்பு அதனால் விளையும் தீமை பெரிதாகும். ஆகவே, உடல் நலத்தைப் பெறுதற்குரிய வழியையும் நன்குணர்ந்தே பின்பற்றுதல் வேண்டும். உடல் நலத்தையே பெரிதாகக் கருதுவோர் 'உலகர்' எனப்படுவர். உடல் நலத்தைப் பெரிதாகக் கருதாது உயிர் நலத்தை நாடுதல் சத்திநிபாதத்தால் உண்டாவது ஆதலின், அதனை நாடுவோர் 'சத்திநிபாதர்' எனப்படுவர். 'உலகர், சத்திநிபாதர்' என்னும் இருதிறத்தார்க்கும் அவரவர் கருதும் பயனை அடைதற்கு இறைவன் இருவகை நெறியை வகுத்திருக்கின்றான். அவை, 'வேதநெறி சைவநெறி' என்பன. வேத நெறியை வேத நூலாலும், சைவ நெறியைச் சைவ நூலாகிய சிவாகமங்களாலும் வகுத்தருளினான் என்பதை,

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
வேறும்உள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்;
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது"

எனக் கூறுகின்றது சிவஞான சித்தி.

இனிச் சத்திநிபாதர் கருதும் உயிர் நலம் எண்குணத்தானாகிய சிவபெருமானை அடைதலாலே பெறத்தகுவது. அப்பெருமானை அடையும் மார்க்கம் (நெறி) நான்கு. அவை, 'சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம்' என்பன. இவையே, 'ஞான யோகக் கிரியா சரியைகள்' எனப்படும். "சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் - தாதமார்க் கம்மென்னச் சங்கரனை அடையும் - நன் மார்க்கம் நால்" என்பது சிவஞான சித்தி. சன்மார்க்கமாகிய ஞானத்தை அடைதற்குத் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கங்களாகிய சரியை கிரியைகளில் நின்று, பின் யோகத்தைப் பெறல் வேண்டும்.

யோகத்தில் உடற்செய்கை இல்லை. சரியை கிரியைகளில் மட்டுமே உடற்செய்கைகள் உண்டு. அதனால், இவைகளே 'தொண்டு' எனப்படுகின்றன. இவைகளிலும் சரியையே

உழன்று செய்யப்படுவதால் 'தொண்டு' எனப்படுதற்குச் சிறந்துநிற்கின்றது. அதுபற்றியே அது 'தொண்டு நெறி' (தாசமார்க்கம்) எனப்படுகின்றது.

'கிரியை' என்பது இறைவனைப் பூவும், நீரும், புகையும், ஒளியும் முதலியவற்றைக்கொண்டு செய்யும் பூசையாகும். 'தொண்டு, பூசை' என்பன சரியை முதலிய நான்கிற்கும் பொதுவாகப் பொருந்துவதாயினும், 'தொண்டு' என்பது சரியைக்கும், 'பூசை' என்பது கிரியைக்குமே சிறந்து நிற்கின்றன. ஞானத்தைப்பெறும் வழியாகிய சரியை முதலிய மூன்றில் நடுவில் நின்று, இரண்டிலும் தொடர்புபட்டு நிற்பது கிரியை. ஆதலால், சைவாகமங்கள் சிவபூசையையே சிறந்தெடுத்துக் கூறுகின்றன.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை என உரைத்தருள"

என்பது சேக்கிழார் வாக்கு.

உயிர்களிடத்தினின்றும் எதையும் விரும்பாது, பூசை ஒன்றையே விரும்புகின்ற இறைவன், அதனை ஏற்பதற்கு அகத்தே அவைகளினது உள்ளங்களிலும், புறத்தே பல திருக்கோயிலிலும் எழுந்தருளியிருக்கின்றான். உள்ளத்தில் உள்ள இறைவனை அவரவரும் முதலில் உள்ளத்தில் வழிபட்டுப் பின்பு புறத்திலும் ஒரு குறியிடத்து வழிபடுதல் தம் பொருட்டுச் செய்யும் வழிபாடு (ஆன்மார்த்த பூசை) யாகும். திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பலரும் கண்டு வணங்கியபோதிலும், காலந்தோறும் முறையாக அங்குச் செய்யப்படும் வழிபாடு, உலகில் உள்ள அனைத்துயிர்களது நலத்தின் பொருட்டும் செய்யப்படும் வழிபாடு (பரார்த்த பூசை) ஆகும்.

இருவகை வழிபாடுகளிலும் செய்யப்படும் பல்வகை அன்புப் பணிகளில் 'திருமஞ்சனம்' (திருமுழுக்கு அல்லது அபிடேகம்) என்பது சிறப்புடையதொன்று. சிவபெருமானை, 'அபிடேகப் பிரியர்' என்று சொல்வது வழக்கம். அதற்கேற்பச் சிவாகமங்கள் சிவபெருமானுக்கு உரிய திருமஞ்சன

வகைகளை ஒன்றல்ல; இரண்டல்ல; மிகப்பலவாக, முறைப்பட எடுத்துக் கூறுகின்றன. அன்றாடம் செய்யப்படும் அபிடேகங்களேயன்றி, மாதந்தோறும் செய்யப்படும் அபிடேக வகைகளையும் முறைப்பட ஆகமங்கள் வகுத்துக் கூறுகின்றன. இத்திருமஞ்சன வகைகளில் **ஆன் ஐந்து** (பசுவிடத்து உண்டாகும் ஐந்து பொருள்கள்) மிகச் சிறப்பாகச் சிவபெருமானுக்கு உவகை தருவனவாகச் சொல்லப்படுகின்றன.

> " ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் "
>
> " ஆனைந்தும் ஆடினான் காண் "
>
> " நெய்யாடிய பெருமான் "
>
> " நேயமே நெய்யும் பாலா
> நிறையநீர் அமைய ஆட்டி "
>
> " நெய்யும் பாலும் தயிருங் கொண்டு
> நித்தல் பூசனை செய்ய லுற்றால் "

என்றாற்போலும் அருள்மொழிகள் ஆனைந்தின் சிறப்பையும், திருமஞ்சனத்தின் பெருமையையும் இனிது விளக்குவன. இவ்வாற்றால் ஆன்மார்த்தத்திலும், பரார்த்தத்திலும் திருமஞ்சனச் சிறப்பே பூசையின் சிறப்பாகக் கருதப்படுகின்றது. இன்னும் பரார்த்த நிலையங்களாகிய திருக்கோயில்களில் திருவிழாக்களாகிய சிறப்புக்களே முதன்மை பெற்றுத் திகழ்வனவாகும். அச்சிறப்புக் காலங்களில் சிவபெருமானுக்கு இத்திருமஞ்சனம் மிகப் பெரிய அளவில் நிகழ்தலைக் காணலாம்.

கோயில்கள் பலவற்றில் 'கோயில்' என்றே பெயர் பெற்று விளங்கும் தில்லைத் திருக்கோயில் முதலாவது. இதில் சிற்றம்பலத்துத் திருநடம் புரியும் கூத்தப் பெருமானே முதன்மை பெற்றுத் திகழ்பவன். இப்பெருமானது நிலை பல வகையில் அதிசயிக்கதக்கதாய் உள்ளது. சற்றே ஊன்றிய ஒரு திருவடியிலே திருமேனி முழுவதும் நிற்றல் முதலாவது அதிசயம். அவனது குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் போல்வன பின்னும் அதிசயிக்கத் தக்கவை. இன்னும் ஊன்றி நோக்குங்கால் அவனது

நாளிலேதான் கூத்தப் பிரானது திருமஞ்சன நாட்கள் ஆறு அமைகின்றன. அந்நாட்கள் நட்சத்திரங்கள் மூன்றும், திதிகள் மூன்றுமாகும். 'சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை' என்பன நட்சத்திரங்கள். 'ஆவணிச் சதுர்த்தசி' புரட்டாசிச் சதுர்த்தசி, மாசிச் சதுர்த்தசி' என்பன திதிகள். இவற்றுள் மாசிச் சதுர்த்தசி மகாசிவராத்திரியாக அமைதல் குறிப்பிடத் தக்கது.

வெண்பா

சித்திரையில் ஓணமுதற் சீரானி உத்தரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் - பத்திவளர்
மாசிஅரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
றீசரபி டேகதின மாம்.

கூத்தப் பெருமானுக்குரிய ஆறு திருமஞ்சன நாட்களில் மார்கழித் திருவாதிரையும், ஆனி உத்தரமும் சிறப்புடையன. முன்னது வைகறைப் பொழுதும், பின்னது மாலைப் பொழுது மாகும். எனினும், மார்கழித் திருவாதிரையில் தரிசனமே சிறப்பாகக் குறிப்பிடப்படும். ஆனி உத்தரத்திலும் தரிசனம் உளதாயினும், அந்தநாளே திருமஞ்சன நாளாகச் சிறப்பித்துச் சொல்லப்படும். அண்மையில் வந்த ஆனித் திருமஞ்சன நாள், அம்பலத்தாடும் அண்ணல் தன்அடியவர் பலர்க்கும் அருட்டிருக் காட்சியாம் அரிய தரிசனத்தையும் வழங்கி, அருள் வெள்ளத்தில் மூழ்கச் செய்தது. ஆண்டவன் திருமஞ்சனத்தால் அருள் வெள்ளத்தில் மூழ்கிய அனைவரும் அவ்வருள் வெள்ளத்திலே திளைத்து அனைத்து நலங்களும் பெறுவர் என்பதனை நினைக்க, நம் அகம் மிக மகிழ்கின்றது.

---

## சொக்கநாத வெண்பா

நீயே பரமசிவன் ஆனக்கால் நின்மலனே
நாயேன் உளம்மகிழ நன்றுகப் — பேயேன்
கருத்தடங்க நின்கருணை காட்டியின்ப வெள்ளம்
அருத்திடுவை சொக்கநா தா. (21)

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# குருவருள்

## நீத்தார் நிலையம்

"பிறப்பென்னும் பேதைமை" என்னும் திருக்குறளால், 'பிறவீயாகிய பெருந்துன்பத்திற்குக் காரணம் பேதைமையாகிய அஞ்ஞானம்' என்பது விளங்கும். உயிர்கட்கு அஞ்ஞானத்தை விளைப்பது ஆணவ மலம். இது தனித்து நிற்கும்பொழுது உயிர்களைக் கண்ணில்லாத குருடன்போல யாதொன்றையும் அறியாதபடி இருளாய்நின்று மறைக்கும். மாயை கன்மங்களுடன் சேர்ந்தபொழுது, உயர்ந்ததை இழிந்ததாகவும், இழிந்ததை உயர்ந்ததாகவும் தோன்றச் செய்து மருளாய் நின்று மயக்கும். அதனாலேயே உயிர்கள் இறைவனை மெய்ப்பொருளாக அறிந்து பற்றாமல், உலகத்தையே மெய்ப்பொருளாக நினைத்து அதனை இறுகப்பற்றி நிற்கின்றன. 'இப்பற்றினாலே அவைகளுக்கு உண்டாவது பிறவியாகிய பெருந்துன்பமே' என்பதைத் திருவள்ளுவர்,

> "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
> மருளான்ஆம் மாணாப் பிறப்பு"

என்றார். இதில் ஆணவத்தினது மருள்நிலையே குறிக்கப்பட்டது.

> "இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு"

என்பதில் அதன் மருள்நிலையோடு, இருள்நிலையும் குறிக்கப்பட்டது.

> "நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை"

என்றதில் மருள்நிலையே 'புல்லறிவாண்மை' எனப்பட்டது. அம்மருள்நிலையால் நிலையற்ற பொருள்கள் பலவும் நிலையுள்ளன போலத்தோன்ற, அவற்றைப்பற்றி நிற்கும் நிலை உண்டாகின்றது. அப்பற்றினால் பலவகைத்துன்பங்களும் பல வழியில் வந்து சூழ்ந்து வருத்துகின்றன. ஆகவே உலகப்பற்றினை எந்த அள

விற்கு விடுகின்றேமோ அந்த அளவிற்குத் துன்பம் தொலை வதாகும். இதனையே.

" யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் "

என்றார் திருவள்ளுவர். உலகப் பற்றை நீக்கினவரே 'அறவர், துறவர், நீத்தார் என்றெல்லாம் சொல்லப்படுவர்.

'உலகம் நிலையுடையது, இன்பமயமானது' என்று நினைக் கும் மருட்சி நீங்கி, 'உலகம் நிலையாதது, துன்பமயமானது' என்னுந் தெருட்சி உண்டாவது ஆணவ மலம் பரிபாகம் எய் தும்பொழுதேயாம். ஆகவே, முற்றத் துறந்த முனிவராகும் நிலை, ஆணவமலம் நீங்கும் பொழுதே உளதாகும். முற்றத் துறந்த முனிவரையே திருவள்ளுவர் 'நீத்தார்' என வைத்து, அவரது பெருமையைத் தமது நூலில் பாயிரத்திலே கூறி யுள்ளார்.

உலகப்பற்றை முற்றிலும் விடுத்து முற்றத்துறந்த முனி வாராதற்கு இயல்பாகவே பற்றற்றவனாகிய இறைவனைப் பற்ற வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் குறிக்கின்றார்.

" பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்பது அத்திருக்குறள். பற்றற்றான் பற்றினால் உலகப் பற்றை அறவே விடுத்த அருளாளர்களையே 'சிவஞானிகள், சீவன்முத்தர்' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றது சைவ சித்தாந்தம்.

சிவஞானிகள் அல்லது சீவன்முத்தர்கள் புறத்தில் நம்மைப் போலவே உண்டு உடுத்து வாழினும், அகத்தில் அவர்கள் பசு கரணம் நீங்கிச் சிவகரணம் அடையப்பெற்றமையால் சிவமே யாய் நிற்பர். அதனால் அவர்களை, 'பராவு சிவர்' – உலாவுகின்ற இறைவர்-என்று சிவஞான சித்தியும், அவர்களது திருமேனி யை "நடமாடுங் கோயில்" என்று திருமந்திரமும் கூறுகின்றன. இறைவன் இவர்கள் வழியாகவே நம்மனோரை ஆட்கொள் வதால் இவர்கள் 'ஆளுடையார்' என்று சொல்லப்படுவர். எனவே இத்தகைய சிவஞானிகள் சிவனேயாதலும், இவர்கள் திருமேனி கள் சிவாலயங்களேயாதலும் விளங்கும்.

இந்நிலை, இவர்கள் இவ்வுலகத்தில் உடலொடு விளங்கும் பொழுதுமட்டுமன்று, இவ்வுடலை விடுத்து இறையடி கூடிய பின்

பும் கொள்ளப்படுவது என்பதனைத் திருமூலர் தமது திருமந்திர நூலுள் 'சமாதிக்கிரியை' என்னும் அதிகாரத்தில் அருளிச்செய் துள்ளார்.

சிவஞானிகளது திருமேனியில் தீப்படும்படி செய்தால் அது சிவாலயத்தில் தீயிட்டதற்கு ஒப்பாகும்; அதனுல் உலகிற்கு உண்டாகும் தீங்குகள் பல என்று அறிவுறுத்துகின்ருர் திரு மூலர்.

எண்ணரு ஞானி உடல் எரிதாவிடில்
அண்ணல்தன் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்;
மண்ணில் மழைவிழா ; வையகம் பஞ்சமாம்;
எண்ணரு மன்னர் இழப்பார் அரசுமே.

இனி, அவர்களது திருமேனியைப் போற்றிப் புனைந்து குகையிடத்து நல்லடக்கம் செய்து வழிபட்டால், உலகிற்குப் பல நலங்களும் பெருகும் என்பதையும் அவர் எடுத்தோதியருளினர்.

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த உடல் தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருஞ் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே.

சிவஞானியரது நல்ல குகை அடக்கத்தினை நல்ல இடங் களில் அமைத்தல் வேண்டும் என்கின்ருர் திருமூலர். நல்ல இடங் களாவன அவர்களே தங்கியிருந்த இடம், தீர்த்தக்கரை, ஆற்றி டைத் திடல், நந்தவனம், நகரத்திற்குள் சிறப்பானதோர் இடம், காடு, மலைச்சாரல் போன்றவைகளாம்.

தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரில் நற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச் சாரல்
இந்நிலந் தான் குகைக் கெய்தும் இடங்களே.

அடக்கக் குகையை அமைக்கும் முறைகளையும் திருமூலர் விளக்கமாகவே கூறுகின்ருர். ஐந்துக்கு ஐந்து சாண் நாற் கோணமாக ஒன்பது சாண் ஆழம் அகழ்ந்து, அதன் உள்ளுக் குள்ளே மூன்றுக்கு மூன்று சாண் முக்கோணமாகக் குகை அமைத்து அதனுள் திருமேனியைப் பத்மாசனமாக இருத்துதல் வேண்டும்.

திருமேனியை இருத்தும் ஆசனத்தின் கீழ்ப் பஞ்சலோகம், நவரத்தினம், முதலியவைகளை இட்டு ஆசனத்தின்மேல் தருப் பையைப் பரப்பி, அதன்மேல் திருமேனியை இருத்தித் திருநீற் றை நிறையக்கொட்டி மூடி, வாசனைப் பொடியையும் நிரம்ப இடு தல் வேண்டும்.

திருமேனியை இருத்துதற்குமுன்னே அதற்கு அபிடேகம் செய்து நறுமணப் பொருள்கள் கலக்கப்பட்ட சந்தனத்தைப் பூசித் திருநீற்றை உத்தூளனமாகப் பூசிப் பின் குழைத்து இட்டு வாசனைப் பொடியையும் தூவித் தூப தீபங்காட்டி ஆரா தித்து அதன் பின் இருத்துதல் வேண்டும்.

இருத்தி முன்னர்க் கூறியவாறு மூடியபின்பு, குகையைத் திரு மேனியளவில் ஒரு நிலையும், அதற்குமேல் நிலமட்டம் வரையில் ஒரு நிலையும், நிலத்திற்குமேல் மேடையாக ஒரு நிலையும், மேடைக்குமேல் ஒரு நிலையும் ஆக நான்கு நிலைகளை அடுக்காக அமைத்தல் வேண்டும்.

மேடையின்மேல் அரச மரம், வில்வ மரம் என்பனவற்றுள் ஒன்றை வைத்தல் ஒருமுறை. ஒருமுறை சிவலிங்கத்தை வைத்தல் மற்றெரு முறை. குகை கிழக்கு நோக்கியேனும், வடக்கு நோக்கி யேனும் இருக்குமாறு அமைத்தல் வேண்டும். (எனவே திரு மேனியையும் அவ்வாறு இருத்துதல் வேண்டும், என்பது விளங் கும்)

குகையின் நான்காம் அடுக்கின்மேல் அதனை மூடுவதாகிய மேற்கட்டி நான்கு பக்கங்களுடன் வானில் உயர்ந்து செல்வ தாகிய ஒன்றும்கூட ஐந்து கூருய்ப் புதுமையாய்த் தோன்ற, அதனை நிலையாக நிற்கின்ற நான்காம் அடுக்கின்மேல் நேரா கக் கவிழ்ந்திருக்கும்படி அமைத்தல் வேண்டும்.

இவையெல்லாம் செய்து முடித்தபின் திருக்குடமுழுக்கு முத லிய வழிபாடுகளை முறையாகச் செய்தல் வேண்டும். (எனவே நித்திய நைமித்திகங்களை நடத்துதலும் சொல்லப்பட்டதாம்)

திருமூலர் இங்ஙனம் பலவும் தோன்ற விரித்துரைத்த இவற் ருல் சிவஞானிகளது திருமேனி யடக்கக் குகை சிவாலயம்போல வே விளங்குதல் அறிந்துகொள்ளப்படும்.

> " துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
> திறந்தாரை எண்ணிக்கொண் டற்று "

எனத் திருவள்ளுவர், அளவிறந்த பெருமை யுடையவராகக் குறித்த நீத்தாரது திருமேனியை உட்கொண்டு விளங்கும் நிலை யங்கள் நீத்தார் நிலையங்களாய் மட்டும் இல்லாமல், குருமூர்த்தி ஆலயங்களாகவும் விளங்கி, ஞான ஒளியைத் தந்துகொண்டிருக் கின்றன. சில இடங்களில் சிவலிங்க மூர்த்தமும் இவற்றில் காணப் படுவதால், நீத்தார் நிலைய வழிபாடு, குரு லிங்க சங்கமம் என்னும் மூன்றன் வழிபாடாகவும் அமைதலை உணர்ந்து மக்கள் பயன் கொள்வார்களாக.

# இரணியன் வதைப் படலம் — தத்துவ நோக்கு *

திரு. டாக்டர். சோ. ந. கந்தசாமி M.A., M. Litt. Ph.D.

காப்பியக் கவிஞன் கம்பன் சிறந்த தத்துவமேதை என்பதை எடுத்துக்காட்டுவது இப்படலம். வான்மீகத்தில் இல்லாத இப் பகுதி கம்பனின் சொந்தப்படைப்பு. வடமொழியில் முதன் முதல் பாகவதத்தில்தான் இரணியன்கதை காணப்படுகிறது. (vide, Sabdakalpadruma, P, 540 by Radhakanto deva ) பாகவதம் ஆழ்வார்களைக் குறித்தலான், தென்னுட்டறிஞரால் பாடப் பெற் றிருத்தல்வேண்டும், என்பர் பேராசிரியர் தாஸ்குப்தா. ("Bhagavata purana must have been composed by a Southerner as it makes referenees to the Alvars" - vide, A History of Indian Philosophy, Vol. IV P. 1; Vol. IV III P. 63 S. Das Gupta, எனவே, பாகவதம் ஆழ்வார்காலத்திற்குப் பிந்திய நூலாதல் வெளிப்படை. பெரியாழ்வார்,

> " அந்தியம் போதில் அரியுரு வாகி அரியை அழித்தவனைப்
> பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்று
> பாடுதுமே "

என இரணியனை அழித்த சிங்கப்பெருமான் சிறப்பினைப் பாடு கிருர். கி. பி. 6, 7-ம் நூற்ருண்டுகளில் தமிழகத்தை ஆண்ட சிம்மவிஷ்ணு, நரசிம்மவர்மன் I. II என்ற பல்லவ மன்னர் காலத்திற்கும் இரணியன் கதை முற்பட்டது. ஆழ்வார் காலத் திற்கு முன்தோன்றிய பரிபாடலில் கடுவனிளவெயினனுர் பிர கலாதனின் பக்திப் பெருமையினையும் இரணியசங்காரம் புரிந்த நரசிங்கனின் புகழையும் போற்றுகிருர் (4 : 10–21) இரணியன் இளவல் இரணியாட்சனைக் கொன்ற வராக வடிவத்தையும் சுட்டு கிருர் (4 : 22-24) எனவே பரிபாடல், நாலாயிரம், பாகவதம் என்ற இலக்கியங்களை எல்லாம் சுவைத்துப் பயின்ற கம்பன்

---

* அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கருத்தரங்கில் 19—12—70 அன்று டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை.

இரணியன் கதையினை விரித்துப் பாடியிருத்தல் இயல்பே. கம்பன் வழியில் இரணியன்வதைப்பரணி என்ற தனி நூலே எழுந்தது.

இரணியன் சாகா வரம் பெற்றவன். பகலிலோ, இரவிலோ தேவராலோ, மனிதராலோ, படைக்கருவியாலோ, ஐம்பூதங்களாலோ, விண்ணிலோ, மண்ணிலோ, மாளிகையின்உள்ளோ, வெளியோ, தன்னைப் பிறர் கொல்லாதிருக்க வரம்பெற்ற இரணியனின் சூழ்ச்சித் திறனும் ஓர் எல்லைக்கு உட்பட்டதாகவே உள்ளது. அவன் இழைத்த கொடுமைகளுக்குத் தக்க தண்டனை விதிக்க வெளிப்பட்ட இறைவன் அவன் வரங்களுக்கு அப்பால் உள்ள உபாயங்களையே பயன்படுத்துகிறான். பகலும் இரவும் அல்லா அந்திப்பொழுதில், மனிதனும் மாவும் கலந்த உருவான நரசிங்கனாய், படைக்கருவியின்றிக் கூருகிரால், மாளிகையில் உள்ளும் புறமும் அல்லாத வாயிற்படியில், விண்ணும், மண்ணும் அல்லாத் தன் மடிமீது கிடத்திக் கொன்றருளிய செய்தியை மேற்கூறிய பனுவல்களில் பரக்கக் காணலாம்.

இராமன் அவதாரத்தினைப் பாட வந்த கவிஞன், வாமனன் விக்கிரமன் முதலிய அவதாரங்களை ஆங்காங்குச் சுட்டி இருப்பினும் நரசிங்காவதாரத்தில்தான் பெரிதும் ஈடுபட்டிருக்கிறான். கதைப்போக்கிற்குத் தேவை இல்லாத இப்படலத்தைக் கம்பன் காவியம் புனைவதற்கு முன்பே பாடியிருக்கலாம். ஆங்கில நாடகங்களில் தோன்றும் இடைக்கதைகள் (Interludes) போல விளங்கும் இப்படலத்தைத் தன் காவியத்தில் பின்னர் கம்பன் இணைத்திருக்கலாம். கம்பத்தில் வெளிப்பட்ட நரசிங்கனைக் 'கம்பன்' என்று பண்டையோர் வழங்கி இருத்தல் வேண்டும். காப்பியக் கவிஞனுக்கு நரசிங்கனின் பரியாயப்பெயர் அமைந்தது அழகுதான்.

இரணியன்கதை ஒருவகையில் இராவணன் கதையை எதிர் ஒலிக்கிறது. இருவருமே சொந்த முயற்சியால் எந்த அளவு உயரலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாவார். இருவரும் தவம் பல புரிந்து வரம்பல பெற்றவர். தேவரையும் யாவரையும் வென்றவர். விண்ணிலும் மண்ணிலும் ஆணை செலுத்தியவர். தாமேபரம் எனத் தருக்கியவர். நல்லோரை நடுங்கச் செய்தவர். இயற்கை கூட இவர் ஆட்டியபடி இயங்கின.

எவ்வளவு தான் ஆற்றலும் அதிகாரமும் பெற்றாலும் தனக்கு மேல் இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் இன்றி அறக் கழிவு புரியும் அசுரசக்திகளை வேரோடு அறுத்து, நல்லோரைக்

காக்கப் பரமன் பின்வாங்கியதே இல்லை என்பதுதான் அவதாரக் கதைகளின் உள்ளடக்கம். ஏகாதிபத்தியமும் முடியாட்சியும் மேலோங்கி நின்ற பழைய வார்ப்படச் சமுதாயத்தில், மன்னர்களையும் வாய்ப்பு வசதிபடைத்தவர்களையும் எச்சரிக்கை செய்வதற்கு இக்கதைகள் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

இரணியன்வதைப் படலத்தில் கம்பனின் தத்துவ வெளிச்சம் பளிச்சிடப் பார்க்கிறோம். கம்பன் காலத்தில் வைணவ நெறி நன்கு பரவி இருந்தது. இராமாநுசரின் தத்துவ உரைகள் கம்பன் உள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். உபய வேதங்களையும் உபநிடதங்களையும் கற்றுத் துறைபோகிய கவிஞன்; வைணவத்தின் அடிப்படைக் கொள்கையான இறை இயல்பு, உயிரியல்பு, வீடுபேற்றுத்தடை, வீடுபேற்றுக்குரிய வழி, வீடுபேற்றின் இயல்பு முதலிய கருத்துக்களை இப்படலத்தில் தெளிவுறுத்துகிறான். அவற்றை ஓரளவு சுட்டிக்காட்ட முயல்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## இறை இயல்பு :

வைணவ சித்தாந்தத்தில் சொல்லப்படும் உண்மை மயமாதல் (சத்யத்வம்), அறிவுமயமாதல் (ஞானத்வம்), வரம்பின்மை (அநந்தத்வம்), இன்பமயமாதல் (ஆநந்தத்வம்), மாசின்மை (அமலத்வம்) எளிவருதல், இரங்குதல், அருளல் (சௌலப்யம், சௌசீல்யம், காருண்யம்) என்ற தெய்வ நலன்களைத் தித்திக்கப் பாடுகிறான். 'மெய்யே' (107) என விளித்துச் சத்யத்வத்தினைக் குறித்தான். 'சித்தென அருமறைச் சிரத்தின் தேறிய, தத்துவம் அவன்' (61), 'உள்நிறைந்திடும் உணர்வாகி' (71) என்புழி ஞானத்வம் உணர்த்தினன். இடம், காலம், வடிவம் என்ற வரம்பு கடந்து எவ்விடத்தும் எக்காலத்தும் எவ்வடிவத்தும் இலங்கும் இயல்பாகிய அநந்தத்வத்தினை, 'மூவகை உலகுமாய்' (63), 'காலமும் கருவியும் இடனுமாய்' (84) முதலிய பல பாக்களில் (64, 65; 68, 70-72, 75-76, 123-126, 155-158) பரவுகிறான். ஆநந்தத்வம் 163-165.ல் பாடல்களில் குறிக்கப்படுகிறது. அமலத்வம், 'அரா அணை அமலன்' (68), 'விமலன் ஆதி நாயகன்' (27) எனப்பொறிக்கப்படுகிறது. நுண்மையும் பருமையும் அவன் இயல்பாதலை,

" ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான் " (74)

"சாணிலும் உளன் ஓர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணிலும் உளன் மாமேருக் குன்றிலும் உளன்; இந்நின்ற
தூணிலும் உளன் நீசொன்ன சொல்லிலும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின் என்றான் நன்றெனக் கனகன் நக்கான்" (124)

என்ற பாடல்களில் தெளியலாம். சௌலப்யம்; சௌசீல்யம், காருண்யம் என்ற இயல்புகள் ஆதிமூலமே எனச் சரணாகதம் செய்த களிற்றினை இடங்கரின் மீட்டுக் காத்த செய்தியானும் (93-94), பிள்ளைப் பிராயத்தனையிலும் பிரகலாதனுக்கு எளிவந்து ஒளிதந்து அருள்பாலித்த திறத்தானும் பெறப்படும்.

## இறைவனின் ஐவகை வடிவம் :

கருமேனி கழிக்க இறைவன் தாங்கும் திருமேனி அரு, உரு, அருவுரு என மூன்றென்பர் சைவர். எனின், வைணவர் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்தென்பர். 'பரம்பொருள்' (30), 'பரன்' (67) 'ஆதிப்பரம்' (110) என்றதால் பரத்துவநிலையினைக் கம்பன் சுட்டுகிறான். பரவாசுதேவன் முத்தொழில் இயற்றும் பொழுது விளங்கும் வியூகநிலையும் கம்பன் உணர்ந்தவனாதல் வேண்டும் (122). பரிபாடலில் வாசுதேவன், சங்கருடனன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற வியூக வடிவங்கள் வருகின்றன (31, 81–82). விபவம் என்பது எட்டாத நிலையில் உள்ள இறைவன் மக்களுக்கு எட்டும் நிலையில் கிட்டி வருதலாம். இதனையே அவதாரம் என்பர். நரசிங்காவதாரத்தின் மாண்பினைப் பாடவே படைக்கப்பட்டது இப்படலம். எனினும், இதற்கு மூத்த வராக அவதாரத்தின் சிறப்பினையும் உரைக்கிறான் (121). ஒவ்வொரு பொருளிலும் ஊடுருவி நிற்கும் இறைவனின் அந்தர்யாமித்துவம்,

"மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் போல எங்கும்
அலகில் பல்பொருளும் பற்றிய அரிகாண் அத்தா" (120)

"ஒன்றலில் பொருள்கள் எல்லாம் ஒருவன்புக் குறைவன்" (123)

முதலிய பாக்களில் உணர்த்துகிறான். பரத்துவம், அந்தர்யாமித்துவம் முதலிய நிலைகளில் இறைவனை ஞானிகளே அனுபவிக்க இயலும். பாமரர்க்கும் இறையின்பம் நல்க அவரவர் விரும்பிய வடிவில் கோயிலில் எழுந்தருளுகிறான். அர்ச்சை என்பது அத்தகு வடிவத்தையே. 'என்னைத் தொழுதேத்தி எய்தும் பயன்' (171) என்றதால் அர்ச்சையினைக் குறித்தான்.

(தொடரும்)

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B, A,

(மலர் 30. இதழ் 7. பக்கம் 359 இன் தொடர்ச்சி)

203 பொருள்கொண்ட கண்டனும் * போதகை யாளும்
இருள்கொண்ட மின்னொளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லார்களே.

குறிப்புரை .- பொருள்கொண்ட கண்டன் - பொருள் பற்றுடையான். போதத்தை ஆளும் இருள் - அறியாமை. மின்னொளி கொண்டு நின்றோர் - பளிச்சென்று காணும் சிறு ஒளியினைக் காண்போர். மயல் - மயக்கம். மாற்றகில்லாமையாவது: மயக்கத்தை மாற்ற முடியாமை.

பொருள் பற்றுடையோரும், பாச அறிவுடையோரும் மாதராசையில் மயங்குவர் என்பதாம். (3)

## 9. மகளிர் இழிவு

204 இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.

குறிப்புரை :- இலைநல வாயினும் - இலை முதலியவற்றால் அழகிதாயினும் எட்டிக்கனியும் பார்ப்பதற்குக் கவர்ச்சியுடைமை பற்றி, 'குலைநல வாங்கனி' எனக் குறிப்பிடப்பட்டது. விலகுறும் - செல்லும். வெய்து கொள்ளீர் - கொடிது என்று கொள்ளீர்.

பாடபேதம் : * போதத்தை.

புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாறலாகாது என்பதாம். 1

205 மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போல் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணாதே,

குறிப்புரை :- மனைபுகுவார்கள் - பிறர் மனை செல்வோர். மனைவி என்பது பிறர் மனைவியை. சுனை - குளம். குளம் போல இம் மகளிர், சேர்ந்தாரை உள்ளிழுத்துக் கொள்வர் என்க. கனவு போல இன்பமாவது, சிறிய இன்பம். நனவு - உண்மை. இவ் வின்பத்தை உண்மையென நாடலாகாது என்க.

மகளிர் இன்பம் கனவுபோலத் தோன்றி மறையக் கூடியது என்பதாம். (2)

206 இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
1 புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் வானவர் 2 சார்வி து என்பது
அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே,

குறிப்புரை ; இயல் - அழகு. பிடி மாதர் - பெண் யானை போன்ற மதத்தினையுடைய மங்கையர். புயலுறும் புல்லின் புணர்ந்தவ ரேயினும் - மழையைக்கண்ட புல் தளிர்ப்பதுபோன்று தளிர்த்தவராயினும். சார இரும் என்பது, வானவர் போன்ற செல்வமுடையவர் சார்வதினால் தளர்ச்சியுற்ற காலத்தில் பொருந்தியவரை வெளியே இரும் என்று சொல்லுவார் என்றபடி. அயலுறப் பேசலாவது, குறிப்பு மொழியால் வெளியேறச் சொல்லுதல். அகன்றொழிந்தார் - கூடப் பிரியமின்றி நீங்கினர்.

இளம் பிடி மாதர் செல்வமுடையார்பக்கம் சார்வர் என்பதாம்.

207 வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே.

---

பாடபேதம் : 1 புயலுறும் புல்லின் புணர்ந்தவ ரேயினும். 2 சார இரும்.




தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் சார்பில்
தமிழக முதலமைச்சர் கலைஞர் மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி அவர்களது
48 ஆவது பிறந்தநாளன்று வாழ்த்தி.
தமிழக அரசின் பிச்சைக்காரர் நல வாழ்வு நிதிக்காக ரூ. 5000 வழங்கியது.
உடனிருப்பவர் காட்டூர் திரு. K. V. இராமையா முதலியார்

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



பெருமக்களுடன்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசக் காட்சி

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்த,
தமிழக அரசு பொதுநலத்துறை அமைச்சர்
மாண்புமிகு. திரு. க. அன்பழகன் எம். ஏ., அவர்களும்

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலில்
அஷ்ட கஜ பூஜைக்குப் பின்னர்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருமடத்திற்கு எழுந்தருளல்

குறிப்புரை :- என் - என்ன பயன்? மெய்யகத்தோர் - உண்மை ஞானி. மகளிரது கூட்டம் நிலேயான இன்பம் தராது என்பது ஞானிகள் கண்ட முடிபு என்க. கொள் மெய்யகம் - கொள்ளும் உடம்பு. இப்பெண்டிர் தோற்றத்தில் இனிமையைக் காட்டி மனத்துள் வெறுப்பர் என்க.

இம் மடவாரது கூட்டம் பயனற்றது என்பதாம்.

208 கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்
ஆழ நடுவர் அளப்புறு வார்களேத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே.

குறிப்புரை :- கோழை - விந்து. குளம் - கர்ப்பாசயம். பாசி - அழுக்கு. அளப்புறுவார் - இன்பம் பெறுவார். தாழ - தடைபட. பூழை - புகுவாயில். போதலாவது அழிதல்.

மகளிர் ஆசையில் செல்பவரை அழிவினின்றும் தடுக்காவிடில் அழிவர் என்பதாம். (5)

( தொடரும் )


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00.

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் - உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

### திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

( மலர் 30. இதழ் 7. பக்கம் 356 இன் தொடர்ச்சி )

(கு - ரை) இமஅசலம் - இமாசலம் (பனிமலை யென்பது பொருள். பிருந்தம் - துளவம். அரவமுனி - பதஞ்சலிமுனி. அத்திரிமுனிவனுக்கும் அநுசூயைக்கும் பிள்ளையாயுற்றபோதுற்ற பெயராம் (பாம்புமுனி) இமயவில் வாங்கிய இமையோன் என்பதிலக்கியம். மால்விடையாய்த் தாங்கினன்காண் சாழலோ என்பது திருவாசகம். எருதாய் பிருந்தவரிமால் சுமந்தேத்தும் எனப் புகன்றனர். திருவையாறகலாத செம்பொற்சோதியும் கற்பனை கடந்த சோதியும் அருட்சோதியும் ஒன்றுகலின் நடனம் புரிந்தையாற்றிருந்த இறைவா என்றார். மாசு-அடையார்மாண்புற வழுத்தும் மாசடையார் என்பார் மாப்புரிசடிலம் என்றார். தவர் - வில். முனி - வெறுத்தவர். பதஞ்சலிமுனிக்கருள் புரிந்த வரலாறு.- அத்திரிமுனியின் தேவியாகிய அநுசூயையிடம் பிறந்தவர். இவர் ஆதிசேடன் அவதாரம். தாருகவனத்தில் சிவமூர்த்தியின் ஆனந்த நடன தரிசனந் தரிசித்த விட்டுணு மூர்த்தி தனித்து ஆதிசேடன்மீதிருந்து பரவசப்பட்டுப் புளகாங்கிதம் அடைந்தனர். இதனைக்கண்ட சேடன் விட்டுணுவைப் பார்த்து இப்புளகாங்கிதத்திற்குக் காரணம் யாதென்றனர். திருமால் காரணங் கூறக்கேட்ட சேடன் அத்திருநடன தரிசனங்காண ஆவல் கொண்டு சிவமூர்த்தியை எண்ணித் தவஞ் செய்கையில் சிவமூர்த்தி பிரமன்போல் வந்து சேடனை நோக்கி யாது வேண்டுமென்று வினவ, சேடன் நாம் உம்மிடம் யாதும் வேண்டோம் என்று தவம் தொடங்குகையில் சிவமூர்த்தி காட்சியருளி யாது வேண்டுமென்றனர். பதஞ்சலி பணிந்து தாம் அறியாது செய்தமைக்குப் பொறுத்தருளல் வேண்டுமெனப் பணிந்து, அடிகேள் அடியவன் நடனக்காட்சிக்காண விரும்புகின்றேன் எனச் சிவமூர்த்தி சேடனை நோக்கி, நீ அநுசூயையிடம் குழவியாய் வளர்ந்து தில்லையினெல்லையை யடைந்து அங்கு முன்பே நடன தரிசனங்காணத் தவஞ்செய்திருக்கும் புலிக்கால் முனிவருடன்

இருக்க, நாம் அவ்விடம் நடனதரிசனம் தருகின்றோம் என்று மறைந்தனர். அவ்வகையே சேடன் இருது நீராடி சிவத்தியானத்துடன் அஞ்சலி செய்து நிற்கும் அநுசூயையின் கரத்தில் விழ அநுசூயை பாம்பென்று கையெடுக்கப் பதத்தில் விழுந்து பதஞ்சலியெனக் காரணப் பெயருற்றுச் சிதம்பரம் அடைந்து புலிக்கால் முனிவருடன் இருந்து சிவமூர்த்தியின் திருநடனதரிசனம் தைத்திங்கள் பூசநாளும் குருவாரமும் கூடிய நன்னாளில் கண்டுகளித்துப் பாணினி வியாகரணத்திற்குப் பேருரையும் யோகசூத்திர நூல் முதலிய அருள் நூல் பல கண்டு அங்கேயே தன்பொருட்டு அனந்தீச்சுரம் என ஒரு கோயிலுங்கண்டருளினார். (கோயிற்புராணம்)

திரிபுரசங்காரம்செய்தமையால் திரிபுராரியென்பதுமாகேசுர நாமங்களில் ஒன்றும். இதன் வரலாறு :- தாரகாசுரன் குமாரராகிய வித்துன் மாலி, தாரகாட்சன், கமலாட்சன் இவர் மூவரும் சிவபூசாபலத்தால் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளையும் பெற்று அக்கோட்டைகளுடன் பறந்து சென்று தேவர்களை வருத்தியிருந்தனர். இதனால் தேவர்கள் சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவபிரான் இவர்களிடத்துள்ள சிவப்பற்றுக் குறையின் இவர்கள் செல்வங் குறைவுறுமெனக் கூறக்கேட்டுக் களிப்புடன் திருமால் இடஞ் சென்று சிவபிரான் திருவாய் மலந்தருளியதைக் கூறினர். திருமால் புத்தராய் அவதரித்து நாரதரைச் சீடராக்கொண்டு திரிபுராதிகளிடம் சென்று அவர்களுக்குள்ள சிவப்பற்றைக் கெடுத்தனர். அதனால் புத்தர் சிவவிரோதிகளாயினர். சிவமூர்த்தி இவ்வசுரரது இருமாப்பைக் கெடுக்கவெண்ணித் தேவர்களை நோக்கித் தேர்கொண்டுவரக் கட்டளையிட்டனர்.

திருமால், இருசுடர்களையும் தேர்உருளையாகவும், காலம் வானம், உதயகிரி, அத்தகிரி, காட்டை, கணம், இலவம், வேள்வி ஐம்பூதம், இந்திரியம் இவற்றை முறையே பார்மேலிடம், நுகம், முன்கொம்பு, கொம்புக்காதாரமான பொருள்களாகவும் புராணங்களைப்படமாகவும், உலோகாயோகபருவதங்களைப் படியாகவும், அட்டகுலபருவதங்களை மேற்கட்டியாகவும், அண்டமுகடு கொடியஞ்சியாகவும், இடைவெளி தட்டாகவும், மறைகளைக் குதிரைகளாகவும், வாசுகியை நாணாகவும், மேருவை வில்லாகவும், பிரமனை முட்கோல்பிடித்துத் தேரினைச் செலுத்தும் சாரதியாகவும், செய்வித்துத் தேர் முடிந்ததெனக் கூறினர். சிவபெருமான் தேரின்மேல் ஏறி வில்லைக்கையிலேந்தி திருமாலினைப் பாணமாக்கி எய்யத்தொடங்குகையில் விட்டுண

மூர்த்திக்கு மனத்திலுதித்த இறுமாப்பை யெண்ணித் திரிபுரத்தைநோக்கியும் இவரது எண்ணத்தை யெண்ணியும் புன்னகை பூத்திட்டனர் என்பதாம்.

காளியொடுங் கண்ட நடனம் காசினியறியுமாகலின் விடப்பட்டது.

**வஞ்ச னதிக வல்வினையேன் மருளன் கொடியன் வன்னெஞ்சன்**
**நஞ்ச னதிக ழரிநெடுங்க ணல்லார் மோக னெனறெரிந்தும்**
**பஞ்ச னதிக ளுடையாய் நின் பதுமப் பதமென் சிரம் வைத்தாய்**
**அஞ்ச னதிகத் துற்பவத் தறவீ டருளும் அம்பரனே** 9

(இ-ள்) வஞ்சன் அதிக(ம்) வல்வினையேன் - வஞ்சகனும் மிகுதியாகிய வலிய தீவினையையுடையவனும், மருளன் - திரிபானவுணர்வுடையவனும், கொடியன் - கொடிய செயல்களைப்புரிபவனும், வல்நெஞ்சன் - இளகாத வன்மையான இறுகிய மனமுடையவனும், நஞ்சு அ(ன்)ன திகழ் அரிநெடுங்கண் நல்லார் - விடம்போல் விளங்குகின்ற கரிய செவ்வரி கருவரி பரந்த விசாலமான கண்களையுடைய இளமங்கையர் இடத்து, மோகன் - காமமயக்க [முடையவனும் ஆகியவன் இவன், எனல் தெரிந்தும் - என்ற செயலைத் தெரிந்து வைத்திருந்தும், பஞ்சநதியுடையாய் - திருவையாற்றுப்பதியில் எழுந்தருளிய தேவதேவரே! நின் பதுமப்பதம் என்சிரம் வைத்தாய் - தேவரீருடைய செந்தாமரை மலராகிய திருவடி அடியேனுடை முடியில் வைத்தருள்புரிந்தருளினீர். அஞ்சன் அதிகத்து உற்பவ(ம்) வித்து அற - அன்னவூர்தியுடைய படைப்புப்படைக்கும் பிரமதேவன் ஆதிக்கத்தால் ஆகும் பிறவியாகிய விதையானது அறவே ஒழிய (நீல்) வீடு அருளும்பரன் ஏ - பிறவா நெறியாகிய முத்திப்பேற்றினை யருளும் முதல்வரே, சூட்டியாண்டாய் என வினைமுடிவு காண்க. (ஈதொருவியப்பேயாம் என்று கூறினர் போலும்) (கு.ரை) அம்சம் + அன் — அஞ்சன் எனவாயிற்று; பிரமன். மருள் - விபரீதவுணர்வு. பஞ்சநதி - ஐயாறு. உற்பவம் - உண்டாதல் மோகம் - மயக்கம். அதிகம் - மிகுதி

**அம்பர வக்கரு மைக்க டற்றூ வடல்சேர் முகுந்தன் மலர்விழியும்**
**அம்பா வக்களி யார்கடுக்கை யணிமா விளமும் புலியுரியும்.**
**அம்பா வக்கலை யொண்பிறையு மணிவோய் எளியேன் இன்பமுற**
**அம்பா வக்கலை மைந்திலங்கு மையாறுநின் னடைக்கலமே** 10

(இ-ள்) அம்பு அரவம் கருமைக் கடல் தூவடல் சேர் முகுந்தன் மலர்விழியும் - நீர்நிறைந்த ஒலியுடைய கருமையான கடல் போன்ற நிறமுடைய, தூய்மையான ஆலிலே மேற்பள்ளி கொள்ளும் திருமாலினுடைய தாமரையாகிய கண்ணினையும், அம்பு அரவு அக்கு அளி ஆர் கடுக்கை - நீராகிய கங்கையையும் பாம்பையும் சங்க மணியையும் வண்டுகள் மொய்க்கும் கொன்றைப் பூவையும், அணிமாவிளமும் - அழகிய பெருமை யுடைய வில்வமும் (பஞ்சவில்வங்களும்) புலியுரியும் - புலித் தோலினையும், அம்பா (ம்) அக்கலை ஒள்பிறையும் - வானில் விளங்குகின்ற ஒண்ணிய பிறைச்சந்திரனையும், அணிவோய் - தந்திருப்பவரே? அம்பா - அழகிய மேலானவரே. (சுந்தர பாண்டியரே) அக்கரம் ஐந்து இலங்கும் ஐயாறு! - திருவைந் தெழுத்தாய் விளங்கும் பெருமானே. திருவையாற்றுபதியில் எழுந்தருளியிருப்பவரே, எளியேன் இன்பம் உற - ஏழையேன், நலன்உற - பேரின்புஎய்த, வேண்டி நின் அடைக்கலம் (புகுந் தேன்) தேவரீருக்கு அடைக்கலமா அடைந்திட்டேன். ஏற்றருள்க என்பதாம்.

(கு-ரை) அடல் - வலிமை. வடல் - ஆலிலை. விளம் - கூவிளம், விளம், நொச்சி, கிளுவை, மாவிளங்கை ஆயவையாம் கடுக்கை முதலாகு பெயர். உரி - உரிக்கப்பட்டது. தோல். ஆளி, அளியெனவாயிற்று. கரியவனுக்கு கண்கள் செவப்பாயின வெனல் வியப்புத்தோன்ற நின்றது.

“ முடிகொண்ட மத்தமும் முக்கண்ணினேக்கு முறுவலிப்பும்
துடிகொண்டகையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்டபாகமும் பாய்புலித்தோலும் என்பாவி நெஞ்சில்
குடிகொண்ட வாதில்லையம்பலக் கூத்தன் குரைகழலே ”

என்ற திருவிருத்தச் செய்யுளில் பாய்புலித்தோல் என்றதை நினைவூட்டியதாயிற்று.

“ நெஞ்சமென்பதோர் நீள்கயந்தன்னிலே
வஞ்சமென்பதோர் வான்சுழிப்பட்டுநான்
துஞ்சும்போது நின் னுமைத்திருவெழுத் (து)
அஞ்சுந்தோன்ற வருளுமையாறரே ”

என்னுந் திருமுறையினை மேற்கொடு அக்காம் ஐந்திலங்கும் ஐயாறு என்றார்.

(தொடரும்)

# திருவள்ளுவர் - வீட்டியல் வித்தகர் *

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.**

( தலைவர் )

அடிகளார் 'பாணி' எனப் புதிய பாணி
அடுத்துவர மேடையிலே புதுமை தோன்றும்;
அடிகளார் இயக்கமெனப் புது இயலக்கம்
அமைந்துவிட மறுமலர்ச்சி தலை யெடுக்கும்;
அடிகளார் கூட்டமென அருளின் கூட்டம்
அருச்சனையில் சீர்திருத்தம் மலர்த்திப் போற்றும்;
அடிகளார் தத்துவமாய் அமைந்து விட்ட
அற்புதத்தை எப்படி நான் எடுத்துரைப்பேன் ? (1)

விரிவுரைக்கு வேந்தன் நீ ; கவியரங்க
வித்தகனாய் வந்துதமிழ் அமுதம் ஈவாய் !
பரிவுரைக்குத் தனிமுகில் நீ ; பாட்டெடுக்கும்
பாவலர்க்கு ஆயிரமாம் கிழியை வைத்தே
தெரிவுரைக்கும் திருப்புத்தூர்க் காவலன் நீ;
திருத்தருமைச் சொக்கனுெடும் காதலன் நீ;
சரிந்துவிழத் தமிழ்ப்பகையை வீழ்த்துவோன் நீ;
சரித்திரமே புதிதாகப் படைத்திட்டோன் நீ. (2)

சிவந்திருக்கும் நல்லாடை ; கருத் திருக்கும்
செம்மொழிகள் ; அன்பர்க்கு வாழ்த் தெடுத்தே
உவந்திருக்கும் நின்திருவாய்; ஒப்பில் லாத
ஒண்டமிழில் ஒளிந்திருக்கும் உனது நெஞ்சம் ;
பவந்திருத்தும் வாசகத்தில் தோயும் பேச்சு ;
பைந்தமிழின் எதிர்ப்பதனைக் காயும் கண்கள் ;
சிவந்திருத்தும் சிந்தையினுய்; முரண்பாடென்ற
செய்தியன்றே நின்வாழ்வு ; அடிகள் போற்றி! (3)

---

* தருமையாதீனத் திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாட்டில் ( 1971 ) தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையிற் பாடப்பெற்ற பாக்கள்.

( நன்றி )

முப்பாலில் முதற்பாலைக் கவிஞர் கோமான்
முடியரசன் மொழிந்திட்டார்; பொருளின் கூற்றை
இப்பால்சீர்த் தமிழன்பன் எடுத்தி சைப்ப
இன்பியலைக் கரந்தையார் ஏற்று ரைத்தார்;
முப்பாலும் தீர்ந்துவிட வேலனுக்கு
மொழிந்திடற்குப் பாலுண்டோ என்று நீங்கள்
செப்பாமல், வள்ளுவத்தில் வீடு தேர்ந்து
செழிப்பதற்கே எனைவைத்தார்; நன்றி சொல்வேன். (4)

( கவி )

காந்திநகர், நேருநகர், பொலிந்து தோன்றும்
காவேரி நகர்,அண்ணா நகர்என்றிந்நாள்
போந்திருக்கும் புதியநகர் பலவற் றுள்ளும்,
புதுமனைகள் கட்டுதற்குத் திறமை வாய்ந்து,
மாந்தருக்குப் புதுவீடு குயிற்று கின்ற
மதிநுட்பம் படைத்தாரும் பார்க்கப் போனால்
ஏந்துபுகழ் 'விட்டியலில்' வித்தகர்தாம்;
எழில்ஞான விட்டியலே இங்கே பேச்சு. (5)

'தெளிவாக வில்லையிங்கே குறட்செல் வத்தில்
திருவீடு'என் றுரைத்திடுவோர் தமக்குச் சொல்வேன்;
அளிமனத்தோர் அன்றுரைத்த பழையபாட்டின்
அடிப்படர்வீர்; பலதொடர்கள் அங்கே காண்பீர்;

* * *

" தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனு அறமுதலா அந்நான்கும் — ஏனோர்க்கு
ஊழின் உரைத்தான் " — நக்கீரனார்.

" அறம் பொருள்இன்பம் வீடென்னும் அந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவே " — மாமூலனார்.

" இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல் "
— நரிவெரூஉத்தலையார்.

" அறமுதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் — குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் " — கோவூர் கிழார்.

" வீடவற்றி னன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள் வெண்பா "
— இழிகட்பெருங்கண்ணனார்.

" அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் " — மாணிபூதனார்.

* * *

தெளிகுவதே வீடென்று கூறி நின்ற
திருவார்த்தை உணர்ந்திடுவீர்; அறிவு பெற்றோர்
களித்திடவே வீடென்ற பாலை மட்டும்
கருத்தூன்ற மறைத்துவைத்தான் குறளின் செம்மல்! (6)

சுவையேறும் பாலினிலே நெய் மறைந்து
துலங்குதல்போல், பற்றற்ற துறவுச் செல்வர்
நவையேறுத் திருமனத்தில் ஞானம் என்ற
நறவூறி நிற்பதுபோல், அழகு நங்கை
சுவையூறும் இதழ்ச்சிரிப்புள் உள்ளம் காட்டும்
சுகமான குறிப்பொன்று விளங்கு தல்போல்,
அவையீரே! வள்ளுவனார் முப்பாற் குள்ளே,
அமைந்திருக்கும் வீட்டுப்பால், உணர்ந்தால் தோன்றும்!

அறநெறியிற் பொருளீட்டி இன்பம் தோய்ந்தால்
அதுவீடு; செந்நெறியிற் படர்ந்த தாலே,
உறவினெடும் துணைவியொடும் மழலைச் செல்வ
ஒளியினெடும் இம்மையிலே, துன்ப மென்னும்
மறவிருளின் தொடக்கின்றி மன்னல் வீடு,
மறுமையிலே தெய்விகத்தின் மாட்சி பொங்கப்
புறவிடர்கள் தொடலின்றி இறைவன் தாள்கள்
புக்கிருத்தல் வீடென்பான் குறளின் ஆசான்! (8)

பொல்லாத உலகியலை வெறுத்து விட்டுப்
புலனடக்கிக் காட்டினிலே கொலு விருந்து,
வில்லாலும் வேலாலும் வாழு கின்ற
வேட்டுவர்போல் மறைந்துறைதல் வீரமன்று;

நில்லாத உலகிதனில், பொய்மை யென்ற
நிலைநடுவே, அறமென்ற துணை பிடித்துக்
கல்லாக மனமாற்றிக் கொண்டு வாழும்
கவின்வாழ்வே வீடுதரும் என்றல் பொய்யோ? (9)

காணிநிலம் வேண்டுமெனும்; கிடைத்து விட்டால்
கைப்பிடிக்கப் பெண்வேண்டி ஏக்கம் கொள்ளும்;
பேணிவைக்கப் பெருஞ்செல்வம் தேடி நிற்கும்;
பெயர்புகழும் பதவிகளும் விழைந்து தேடும்;
ஆணிமுத்தாய்ச் சான்றோர்கள் கூறிச் சென்ற
அறந்தன்னைப் புறக்கணிக்கும்; தீமை வாழும்
தோணியென மாற்றிவிடும் உடலந் தன்னைச்
சொல்லலுற்றால் ஆசைதனக் கெல்லை யுண்டோ? (10)

பூத்திருக்கும் மலருக்குள் புகுந்த வண்டு,
பூந்தேனைச் சுவைத்துவிட்டுப் பறத்தல் போலே
காத்திருக்கும் ஏழையர்கள் பொருளை மெல்லக்
கனவாக்கி விழுங்கிவிட்டுப் புதியவர்க்காய்ப்
பார்த்திருக்கும் செல்வரைப்போல், ஆசை, நெஞ்சைப்
பசையறவே செய்தழிக்கும்; ஆதலாலே
கூர்த்தமதி உடையவரே 'அவா அறுப்பீர்!'
கொடுக்குமந்த நிலைவிடு பேற்றை என்பான்! (11)

❋

"ஆரா வியற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்"

❋

வீடடைந்தால் இன்பமிலை; துன்பமில்லை;
வெகுளியிலை; சாந்தமிலை; இன்பம் தோயும்
நாடடைந்தாலும் ஒன்றே; பொய்மையென்ற
நச்சவரத் தீமையிலை; அடர்ந்திருக்கும்
காடடைந்தாலும் ஒன்றே; நிலைத்திருக்கும்
கனிவுண்டாம்; சமநிலையே வாய்த்திருக்கும்
பீடடைந்தால், வள்ளுவனுன், வீட்டை என்றும்
'பேராத இயற்கை' யெனப் பேசல் பொய்யோ? (12)

'சார்பென்பான்' முதற்பொருளை; 'உள்ள' தென்று
சாற்றுவான்; 'செம்பொருளாய்'க் காட்டி நிற்பான்!
வேர் போன்று தோன்றுமே மறைந்து நிற்கும்
வித்தகத்தை உணர்த்திடுவான்; உயிர்க்குலத்தைக்

கார்போன்று கருணையெடுங் காக்கும் என்பான்!
    கருத்தாழ மொடுமதனை 'மெய்யே' என்பான்;
யாரிவனைப் போலிங்கே வீடுரைத்தார்?
    யாண்டுமிவன் கூறுமுறை கடைப்பிடித்தார்? (13)

வகுப்பறையில் மூத்தவனை அரவணைத்து,
    வாய்பிளந்து கொட்டாவிச் சங்கிசைத்துத்,
தொகுப்பாக ஆண்டுபல போக்கித் தேர்வாம்
    தொலைதூரக் கற்பனைப்பின் திருத்து வோர்தம்
பகுப்பாரா எனநெடிய வேட்டை யாடிப்
    பணத்தாலே பட்டத்தைச் செய்து விட்டு
மிகுப்பார்க்கு வீட்டருமை தெரியுமோதான்?
    மீதமெலாம் அவர்க்குலகம், உலகம் அன்றோ? (14)

மண்ணுக்குள் சிறுபூச்சி தன்னைத் தின்று
    மண்புழுக்கள் வளர்வதுபோல், மன்பதைக்குள்
கண்ணுக்குத் தெரியாத தோற்றம் கொண்டு
    கைப்பொருளால், மெய்ப்பொருளை மறந்து விட்டு
விண்ணுக்கும், மண்ணுக்கும் எனத் தருக்கி
    விளைகின்ற கீழ்மையினர், தமிழ்கலந்த
பண்ணுக்குள் சுவைபோலும் வீட்டின்மாட்சி
    பழகுவரோ? பழகிடினும் தெளிகு வாரோ? (15)

வீட்டியலென் றுரைத்திட்டால், 'சன்னலுண்டா?
    வெளிப்புறத்துத் தோட்டமுண்டா? வெளியில் நீட்டிக்
காட்டுகின்ற கிளைக்குள்ளே பூக்களுண்டா?
    காற்றுண்டா? சமையலறை தானு முண்டா?
வாட்டமின்றி வரவேற்கும் அறையுமுண்டா?
    வண்ணமுண்டா? குடிநீர்க்கு வசதி உண்டா?
வீட்டிற்கு வாடகைதான் என்ன?' என்று
    விளம்புவார்; மெய்வீட்டின் தரம்காண் பாரோ? (16)

ஐயத்தின் நிலை நீங்கித் தெளிந்த வர்க்கே
    அணித்தாகும் வீட்டுலகம்; காணுகின்ற
வையத்தின் மிக எளிதாம்' என்றுரைக்கும்
    வாக்கினிலே வள்ளுவனார் உலகமெல்லாம்
உய்யத்தான் காட்டுகின்ற நெறியைக் காண
    உளம் வேண்டும்; அறிவினிலே தெளிவு வேண்டும்!
வையத்தான் கற்றோர்கள் பலபேர்; சான்றோர்
    வாய்மொழியை வாழ்த்தத்தான் கற்கின் றாரா? (17)

விடிந்தெழுந்தால் வீட்டியல்தான்; தேநீருக்கு
வேளையுண்டு; உணவுண்டாம்; ஏவல் கேட்க
முடிந்தவரை ஆளுண்டு; செவியிற் கேட்டும்
முணுமுணுக்கும் துணைவியுண்டு; வேலை சொன்னால்
படிந்தியற்று மக்களுண்டு; அலுவ லுண்டு;
பணியாற்றி வயிற்றிற்குச் சோறுபோட
இடிந்திருக்கும் வீடுண்டாம்; இப்படித்தான்
எல்லோர்க்கும் வீட்டியலே விளங்கித் தோன்றும்! (18)

பெருங்காற்றால் மடமடவெனச் சாய்ந்து வீழும்
பெருமரம்போல், தேர்தலிலே வாக்குச் சீட்டாம்
பெருங்காற்றால் சடசடெனச் சரிந்து வீழும்
பிற்போக்குக் கோட்பாட்டுத்தலைவரைப்போல்.
வருங்கூற்றால் தலைவணங்கி வீழுகின்ற
வரைக்குமிந்த வீட்டியலே; அப்பாற் சென்று
மருங்காகப் புகழ்நாட்டி மன்னி நிற்க
மண்ணினில் நாம் என்செய்தோம்? யாதும் இல்லை! (19)

வையகத்து வாழ்வுவரை சிந்தை செய்வோம்;
வரம்பிற்கு மீறியபின் நிலையைப் பற்றி,
ஐய! இலங்குக் கவலையேன்! அது மறந்தே
ஆற்றிடுவீர்; பொருள்சேர்ப்பீர்; ஆவலோடே
பையதனைப் பெருக்கிடுவீர்; உலக வாழ்விற்
பணபலமே படைப்பலமாம்; பாரீர் ' என்றே
மையலுடை மாந்தர் பலர் தாமும் கெட்டு,
மற்றவர்க்கும் நெறிகாட்டிக் கேடுசெய்வார்! (20)

வெளிநாடு செலநினைப்போர் பயணச் சீட்டு,
விசா, வங்கிப் பொருள்மாற்றச் சீட்டு, வாய்த்த
களிநாடு மனத்தோடே சேர்த்தியற்றல்
கடனன்றோ? நடைமுறையில் கடன்கள் ஆற்றி,
ஒளிநாடு வீடதனை ஒருநாள் நாமும்
உறவேண்டும் எனுங் குறிக்கோள் உளத்தடைத்துத்
தெளிநாட வேண்டுமன்றோ? இதனைக் கூறும்
திறம்நாடில் வீட்டுநலம் குறளிற் காண்போம். (21)

சிலையெடுப்போம் வள்ளுவர்க்குப் பேருந் தெல்லாம்
சீர்க்குறளை வரைந்திட்ட செய்தி காண்போம்;
நிலையெடுத்த திருக்குறளைப் படித்தும் கூட
நினைந்திருப்போம் கயமைநெறி; எடுத்துச்சொன்னால்,

தலையெடுத்தான் இவனுரைகள் பாழாமென்றே
தகுபதவிச் செல்வாக்கால் அமிழ்த்தப் பார்ப்போம்;
வலையெடுத்த மான்போலே நல்லோர் கூட்டம்,
வாடிநின்றால் மறுமையினைக் காண்பார் எங்கே? (22)

பட்டிமன்றந் தனிலேறிக் குறளைப் பேசிப்
பலமணிகள் கொல்லாமை, வாய்மை கூறிக்
கொட்டிமுழக் கியபின்னர், கடமையாற்றிக்
கூட்டமுடிந் திடுமுன்னே உணவுக்காக
வெட்டிவைத்த புலாலுணவைச் சுவையினோடு
விழைந்துண்ணும் சிறியரினம், முப்பாலுள்ளே
ஒட்டிநிற்கும் வீட்டியலை உணர்தல் வேண்டி
ஒண்டமிழிற் பாட்டியலை உரைத்திட்டேனே! (23)

வாடகைக்கு நாமெடுத்த வீடே, கோலம்
வனைகின்ற நம்முடலம்; என்றும் உள்ள
தேடரிய தனிவீடு 'புக்கில்' ஆகும்;
தேர்க' என வள்ளுவனார் உரைத்த பாட்டு,
நாடரிய வீட்டுநலம் காட்டி நிற்கும்;
நடைசிறந்து, நிலையாமை புரிந்து கொண்டு,
நாடறிய மெய்யுணர்தல் நன்றாம், என்றே
நவின்றமொழி துணைக்கொள்வோம்; நலம்
காண்போமே. (24)

அறமென்ற அகலெடுப்போம்; முயற்சி யாலே
ஆன்றபொருள் நெய்யதனில் ஊற்றி வைப்போம்;
சிறக்கின்ற இன்பமெனுந் திரிசமைத்தே,
சிந்தனையாம் தீக்கொளுவி ஆழ்ந்து பார்ப்போம்;
சிறப்பென்னும் வீட்டுநலம் தெளியக் காண்போம்;
செம்மலவன் குறள்நெறியின் ஓதும் ஈதே
மறம் வென்ற நெறியாகும்; இந்த உண்மை
மலர்ந்துவிட்டால் வையமெலாம் தேன்,தேன், தேனே.

## சொக்கநாத வெண்பா

விதிமார்க்கம் எப்பொழுது மேயறியேன் ஊழின்
விதிமார்க்கம் அல்லாது மெய்யாங் — கதிமார்க்கம்
காட்டுவாய் நாயேன் கரையேற எவ்வுலகும்
ஆட்டுவாய் சொக்கநா தா! (22)

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப, நீலா

( மலர் 30, இதழ் 6, பக்கம் 370 இன் தொடர்ச்சி )

## 42. திருமுகங் கொடுத்தது

முன்னவனும் மதுரை மூதூர் முதல்வனுமாகிய சிவபெருமான் இசைபாடி ஏமநாதனை வென்றபிறகு பாணபத்திரனுக்காகத் திருமுகந் தந்தருளினர். அவ்வினிய நிகழ்ச்சியைக் காண்போம்.

யாழ்வல்ல பாணபத்திரன் அன்றுதொட்டு மதுரைப் பரனைப் பாடுவதே தனது கடன் எனக்கொண்டு பனிமதி மருமான் (பாண்டியன்) கோயிலில் பாடும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டான். குனிமதிமிலைந்தகொன்றை வேணியனின் கோயிலிலன்றிப் பிறவிடங்களில் பாடுதல் தொழில்ஒழிந்தமையால் சின்னுட்களில் அவனை வறுமைவந்தடைந்தது.

### உயிர்தோறும் ஒளித்த கள்வன் :

நாள்தோறும் தன்னைப் பாடவருகின்ற பாணனின் வறுமையைத் தீர்ப்பதற்காகப் பொன்னுர்சடைப் புனிதன் பாண்டியனின் பொருளறையிலிருந்து பொருள்களைக் கவர்ந்து வந்து கொடுக்கும் நியமம் கொண்டான். சிலநாள் பொற்காசும், மணிக்கலன்சிலபகலும், செம்பொன்னுடை வகைகளைச் சிலதினங்களும் இப்படியாகச் சாமரைக்காம்பு, அரிமான் சேக்கையின் ஆடகத் தகடு இவைகளையும் கவர்ந்து கொடுத்துவந்தான், கையில் கிடைக்கும் பொருள்கள் உலக உயிர்தோறும் ஒளிந்துநிற்கும் ஒருவரால் நமக்குக் கிடைப்பவை என்றுணர்ந்து பாணன் அயலவர் அறியாமல் அவைகளை நெருப்பிலிட்டு உருக்கி உருமாற்றி - விற்று சுற்றத்தையும் குடும்பத்தினரையும் பாதுகாத்து வந்தான். இப்படிச் சிலநாள் செல்ல - பெருமான் பின்பு

பொருள்களைக் கவர்ந்துவந்து தராமையால் சுற்றமும் தானும் துயர்க்கடலுள் வீழ்ந்து வருந்துவானானான்.

### திருமுகங்கொடுத்த ஒருபெருங் கடவுள் :

ஒருநாள் துன்பத்துள் ஆழ்ந்து வருந்தும் பாணபத்திரன் கனவில் தோன்றிய பெருமான் பாணபத்திரனே! "இதுநாள் வரை எம்மிடம் அன்புகொண்ட பாண்டியனின் பண்டாரத்தி லிருந்து உனக்காகப் பொருள்களைத் திருடிக் கொடுத்து வந்தோம். அவனே மற்றைய ஆடவர்பால் ஆசைகொள்ளாமல் மனதை அடக்கிக் கற்பினைக் காக்கும் மகளிர்போல்; புலன்களை அடக்கித் துறவைக் காக்கும் யோகிகள்போல் பண்டாரத்தினை உள்ளும் புறமும் காவல்செய்து கயலிலச்சினை பொறித்து வைத்துள்ளான். அந்தக் காவலும் இலச்சினையும் பிழைபடாமல் நான் பொருளறையை யானைஉண்ட விளங்கனிபோல் ஆக்கி விட்டேன். இதனை அறிவானானால் ஒன்றுமறியாக் காவலர்களைத் தண்டிப்பான்.

ஆகவே இப்போது உன்னைப்போலவே நம்மிடம் அன்பு கொண்டுள்ள சேரமாமன்னனுக்குத் திருமுக ஓலையொன்று தருகின்றனம். பெற்றுச்சென்று அவர்பால் பொருள் பெற்று மீள்க" என உணர்த்தி யருளினான்.

மறைக்கு உரைசெய்த வாக்கால் 'மதிமலி புரிசை' என்னும் சிறப்பிற் சீர்சால் செய்யுளை இறைவன் எழுதித்தர உறக்கம் நீத்த பெரும்பாண் செல்வன் ஆடிப்பாடி உவகைமாக் கடலில் ஆழ்ந்தான். இறைவன் அருளிய திருமுகப் பாசுரம் இதுதான்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூ படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

மதில்கள்மேல் மதிதோயுமளவுக்கு உயர்ந்த மாடக்கூடங்களை உடையது மதுரை., அங்கே பொழில்களில் பால்நிறச் சிறகுகளோடு கூடிய அன்னங்கள் பயின்று கொண்டிருக்கும், அங்கே உள்ள ஆலவாய்க் கோயிலில் நிலைபெற்ற சிவன்யான். இப்பொழுது நான் சொல்லவருகின்ற செய்தி இது.

பருவ மேகம்போல் பாவாணர்களுக்குப் பரிசிலைத் தவறாது உரிமையோடளிக்கும் சேரனே! மதியொத்த குடை நிழலிலிருந்து போர்ப்பரியுகைக்கும் சேரனே இதைக் காண்க.

பண்பு சிறிதும் கெடாமல் - யாழ் மீட்டும் பண்பு பற்றிய மரபில் வந்த பாணபத்திரன் உன்னைக்காண வந்துள்ளான். உன்னைப்போலவே அவனும் அன்புகொண்டவன். உன்னைக் காணவே வந்த அவனுக்குச் சிறந்த பொருள்கள் பலவுங் கொடுத்து மீட்டும் எம்பால் வரவிடுக என்று எழுதியிருந்த திருமுகப் பாசுரத்தைப் பாணன் பெற்றபோது அகங்களித்துக் கூத்தாடியதில் ஆச்சரியமென்ன ?

பொழுது புலர்ந்ததும் அத்திருமுகத்தைப் பட்டாடையில் சுற்றி எடுத்துக்கொண்டு இறைவனின் திருக்கோயிலை வணங்கி வலம் வந்தபின் வரைநிறை அருஞ்சுரங் கடக்க முந்தினன். கொல்லை, குறிஞ்சி, வன்பறல், பாலை எல்லாம் கடந்து பலவின் பழம் (பலாப்பழம்) கிடந்து அடியில் இடறக்கூடிய மலைநாட்டை மெதுவாக வந்தடைந்தான்.

### சேரமான் செய்த சிறப்பு :

அம்மலைநாட்டின் திலகமென விளங்கும் திருவஞ்சைக்களம் அறமகளின் ஆக்கத்தையும் மலரின் மேவிய செந்நிற மகளின் ஆக்கத்தையும். ஒருங்கே பெற்றது. அத் திருப்பதியில் வந்துற்ற பாணன் ஒரு தண்ணீர்ப்பந்தல் சாலையில் தங்கினன். அன்றிரவு சேரமான்பெருமாள் நாயனார் கனவில் தோன்றிய கண்ணுதல் தென்னவனின் தொன்மதுரைச் சித்தர்யாம். உன்னைக் காணவும் உன்னிடம் பொருள்பெறவும் நம்மிடம் ஓலை பெற்ற ஓரன்பன் இங்கு வந்துள்ளான். அவனுக்கு நிறைய நிதிகொடுத்து நம்பால் அனுப்புக ' என்று கூறி மறைந்தார்.

தண்ணிழல்தரும் வெண்கொற்றக்குடைச் சேரர் காவலன் பொழுது புலர்ந்ததும் அப் பாணபத்திரன் எங்குள்ளான்என்று தேட தன்னாட்களைப் பலதிசைகளுக்கும் அனுப்பினன். அவர்கள்

பாணனைத் தண்ணீர்ப்பந்தலில் கண்டமை கூற சேரமன்னன் தானைபுடைசூழ பாணபத்திரனை அழைக்க வந்தான்.

அவன்பாலிருந்த செஞ்சடைக் கடவுளின் திருமுக ஓலையைக் கண்டு அதனைத் தம் தலைமேற்கொண்டு ஆடிப்பாடிமகிழ்ந்தான். அதிலுள்ள செய்தியினை வாசித்துப்பார்த்தான்.

" மின்னவிருஞ் செம்பொன்மணி மாடக்கூடல்
மேயசிவன் யாமெழுதி விடுக்குமாற்றம்
நன்னர்முகி லெனப் புலவர்க் குதவுஞ்சேர
நரபாலன் காண்கதன்போ னம்பா லன்பன்
இன்னிசையாழ்ப் பத்திரன்தன் மாடேபோந்தான்
இருநிதியங் கொடுத்துவர விடுப்ப தென்னத்
தென்னர்பிரான் திருமுகத்தின் செய்திநோக்கிச்
சேரர்பிரான் களிப்பெல்லை தெரியா னாகி "

திகைத்து நின்றான். உடனே பாணபத்திரனை யானைமேல் வைத்துத் தான் கவரி யிரட்டிக்கொண்டு திருமாநகரை வலஞ் செய்து அரண்மனை புகுந்தான்.

பல்லாற்றானும் பாணனை உபசரித்தபின்னர் செம்பொன் அறையைத் திறந்துவிட்டு 'வேண்டிய கொள்க' என்று கூறி அயல் நின்றான் வேந்தன். பாணபத்திரன் அதற்கிசையாமல் இறைவனின் உத்தரவுப்படி நிதியத்தினை நீரேதாரும் என்று இறைஞ்சிநின்றான். அதன்பின்னும் சேரர் கோமான் அள்ளி அள்ளித்தந்த பொருளெல்லாம் வாங்க மறுத்துவிட்டுத்தான் வேண்டுமளவு பொருளைப்பெற்று மகிழ்ந்து விடைபெற்று நாடு மீண்டான். பணியணிந்த பெருந்தகை பாணபத்திரன் பின்னே வெகுதூரம் நடந்துவந்து விடை கொடுத்தான்.

மதுரை வந்த பாணபத்திரன் செல்வத்தினால் அற்றாரையுஞ் சுற்றத்தையும் பாதுகாத்து அறம் வழுவாமல் இல்லறம் நடத்தினான்.

(வளரும்)

# திருவருட்பயன் விளக்க உரை

( மலர் 30, இதழ் 7, பக்கம் 373 இன் தொடர்ச்சி )

நான்காவது குறள்,

" அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
யின்றளவும் நின்ற திருள் "

எனவரும்.

இதன்பொருள் :- இருள் - இருளாகிய ஆணவ மலம்; ஆவியிடை உள் ஒளியோடு அன்று அளவி - உயிரின்கண் இரண்டறக் கலந்து நிற்கின்ற அக ஒளியாகிய பதிப்பொருளோடே தானும் அன்றே இரண்டறக் கலந்து; அடங்கி - அவ்விரண்டிற்கும் கீழ்ப்பட்டதாய்; இன்றளவும் நின்றது - இதுகாறும் நீங்காமலே உள்ளது.

விளக்கவுரை : 'அன்றே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று "அன்று" என்றது, 'பதி பசுவிற் கலந்துள்ள அப்பொழுதே' என, வேறொரு காலத்தைக் குறியாது, இயற்கையாகிய அனாதி நிலையைக் குறித்தது. அதனால், 'பதி என்று உண்டோ அன்றே பசுவும் உண்டு' என்பதும், 'அவை இரண்டும் உள்ள அன்றே பாசமும் உண்டு' என்பதும், "அளவி" என்றதனால், 'அம்முப் பொருளும் வேறுவேறாய் நில்லாது, ஒன்றாய்க் கலந்தே உள்ளன' என்பதும், "அடங்கி" என்றதனால், 'மூன்றும் ஒன்றாய்க் கலந்து நிற்பினும் அவை தம்முட் சமமாகாது, பதியில் பசுவும், பசுவிற் பாசமும் அடங்கி நிற்பன' என்பதும் பெறப்பட்டன. அடங்கி நிற்பதை 'வியாப்பியம்' என்றும். அடக்கி நிற்பதை 'வியாபகம்' என்றும், சம நிறைவாய்ப் பற்றி நிற்பதை 'வியாத்தி' (வியாப்தி) என்றும் கூறுவர். பருப்பொருள் (தூலம்) வியாப்பியமாயும், நுண்பொருள் (சூக்குமம்) வியாபகமாயும் இருத்தல் இயல்பு. ஆகவே, பாசம் பருப்பொருளும், (தூலப்பொருளும்) பசு நுண்பொருளும், (சூக்குமப் பொருளும்) பதி நனிநுண்பொருளும் ( அதிசூக்குமப் பொருளும்) ஆதலும், பதி வியாபகமும், பசு அதனில் வியாப்

பியமும், பாசம் அதனில் வியாத்தியும் ஆதலும் அறிந்து கொள்ளப்படும். அதி சூக்குமத்தை, 'பரம்' என்பர். தூல மும், பரமும் தம்முள் இடையுமாறு இல்லை யாதலின், தூல மாகிய ஆணவம் பரமாகிய பதியைப் பற்ருது, அதனிற் கீழே யுள்ள பசுவையே பற்றி நிற்கும் என்க. பதி, பசு, பாசம் மூன்றும் தம்முள் கலந்து நிற்றற்கு, "தண்கடல் நீர் உப்புப் போல்"* என்று உவமை கூறுவார் மெய்கண்டார்.

"இன்றளவும்" என்றது, 'எண்ணற்ற பிறவிகளில் உழன்று இம் மானுடப் பிறவியில் வந்து பொருளியல்பை ஆராயத் தொடங்கிய இன்றுகாறும்' என்றபடி. "நின்றது" என்றது, ஏனை மாயை கன்மங்கள்போல விட்டு விட்டுப் பற்ருது, இடையருது பற்றி நிற்கின்றது' என்றவாறு. இன் னும், 'இன்றளவும் நின்றது" என்றது, 'இது நீங்குங் காலம் என்ருே' எனவும் பொருள் தந்து, 'இது நீங்குங் காலமும் ஒன்று உண்டு' என்பதனைக் குறிப்பித்தது.

இதனுல், 'ஆணவம் செம்பிற்குக் களிம்புபோல் உயிருக்கு இயற்கைக் குற்றமாயும், 'தூல சூக்கும பரம்' என்பவற்றுள் தூலமாய்ப் பசுவோடே கலந்து அதனின் வியாப்பியமாம்' என்பதும், இயற்கை (அனுதி)யாயினும், 'குணமாகாது குற்ற மாய் நிற்றலின் ஒருகாலத்தில் நீங்கும்' என்பதும் கூறப் பட்டன. இயைபுபற்றி பதி பசு பாசங்கள் தம்முள் வியாபக வியாப்பிய வியாத்திகளாதலும் பெறப்பட்டன.

ஐந்தாவது குறள்,

> "பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்குண் டென்றுங்
> கணவற்குந் தோன்ருத கற்பு"

எனவரும்.

இதன்பொருள் :- இருட் பாவைக்கு - அக இருளாகிய 'ஆணவம்' என்னும் பெண்ணிற்கு; பலரைப் புணர்ந்தும் - அவள் பலரைக் கூடியிருப்பினும்; என்றும் கணவற்கும் தோன்ருத கற்பு உண்டு - எஞ்ஞான்றும் தன் தலைவனுக்கும்

* சிவஞானபோதம் சூ. 7. அதி. 3.

தனது உருவைக் காட்டாத கற்புநிலை உளதாகின்றது; இது வியப்பு !

விளக்கவுரை :- 'இது வியப்பு' என்பது குறிப்பெச்சம். "பலர்" என்றது உயிர்களையும், "கணவன்" (தலைவன்) என்றது கடவுளையும் என்க. ஆணவம் ஆன்மாவுடன் வேறறக் கலந்து நிற்பினும் என்றும் அவ்வாறே நில்லாது ஒரு காலத்தில் நீங்குதலின், அவைகட்கு உரிய இல்லாள் என்னுது, பிறனுக்குரிய, ஒழுக்கம் இல்லாத இல்லாளாகவும் பசு, பாசங்கள் அனைத்தையும் அடிமையாகவும், உடைமையாக வும் உடையவன் இறைவனேயாதலின் அவனை அவட்குக் கணவனுகவும். அவன்முன் ஆணவம் ஒளிமுன் இருள்போலும் ஆதலின் அவனுக்கும் அஃது என்றும் புலனுகாமையைச் சீரியதொரு கற்பாகவும் உருவகித்தார். எனவே இக்குறள், "நீராடான் பார்ப்பான்"* என்றாற்போலும், பிசிச்செய்யுள் ஆதல் உணர்க. 'கணவர்க்கும்' எனப் பன்மையாகப் பாடம் ஓதி, 'கணவர், ஆன்மாக்கள்' என உரைத்தல், "ஒரு பொருளுங் காட்டாது" என மேற்போந்ததனையே கூறுவதாய் இக்குறளை வெற்றெனத் தொகுத்தலாக்குதலையும், "பலர்" என முன்னர்ப் பிறராகக் கூறப்பட்டவரையே பின்னர், 'கணவர்' எனத் தன்னை உடையவராகக் கூறுதல் மாறு கொளக் கூறலாய் முடிதலையும், "ஆவியிடை அடங்கி" என மேற்குறிப்பாற் கூறியதனை (ஆணவம் இறைவன் ஒளிமுன் இருள்போலும் என்பதனை) இனிது விளங்க எடுத்தோதுதலும் இன்றியமையாததாதலையும் ஓர்ந்துணர்க.

"பாவை" என்ற ஒருமையால், ஆணவம் ஒன்றேயாத லும் "பலரைப் புணர்ந்தும்" என்றதனுல், அஃது ஒன்றே யாயினும் அளவற்ற உயிர்களையும் மறைத்து நிற்கக்கூடிய அளவற்ற ஆற்றலை (சத்தியை) உடையதாதலும், தன்னுல் அடையப்பட்டவரைக் கணவரல்லாத பிறர் என்றமையால், அவர்களைப் பற்றி நிற்கும் ஆற்றல்கள் ஒவ்வொரு கால எல்லை யில் அவர்களை விட்டு நீங்குதலும் பெறப்பட்டன.

இதனுல், 'ஆணவம் பொருளால் ஒன்றேயாய், அளவற்ற சத்திகளால் எல்லா ஆன்மாக்களையும் மறைத்து இறைவன்

---

*தொல், செய்யுள் சூ. 176. பேராசிரியர் உரைக் காட்டு.

முன் தோன்ருமல் நின்று, அங்ஙனம் மறைக்கப்பட்ட ஆன் மாக்களை ஒவ்வொரு கால எல்லையில் விட்டு நீங்கும்' என்பது கூறப்பட்டது.

ஆருவது குறள்,

" பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மைஇரு ளார்தந் தது "

எனவரும்.

இதன்பொருள் :- பன்மொழிகள் என் - ஆணவ மலத்தின் உண்மை (இருப்புப்)பற்றிப் பல தடை விடை மொழிகள் எதற்கு; உணரும் பான்மை தெரியாத தன்மை – முன்னை யதிகாரத்தில் 'உயிர் உணருந் தன்மைத்து' என விளக்கப் பட்டதற்கு மாருக, அதற்கு அத்தன்மை தோன்ருத நிலை; இருளார் தந்தது - 'அக இருள்' எனப்பட்ட ஆணவமாகிய அம்மையாரால் தரப்பட்டதே,

விளக்கவுரை :- அதனுல், 'அவ்வம்மையாரது இருப்பைப் பற்றி ஐயுற வேண்டுவதில்லை' என்பது குறிப்பெச்சம். தெரிதல் - தோன்றுதல். " இருளார் " என உயர்திணையாகக் கூறியது, இகழ்ச்சிக் குறிப்பாய், அதனது இழிவு தோற்றி நின்றது.

முதல் இரு குறள்களால் ஆணவ மலத்துண்மை கூறப் பட்டதாயினும், 'அஃது உயிருக்காதல், இறைவனுக்காதல் புலனுதல் இல்லை' என்றமையால், 'ஒருவருக்கும் புலனுகாத ஒன்று உள்பொருளாதல் எவ்வாறு' என மீள ஐயம் நிகழ் தலின், 'காட்சிக்குப் புலனுகாதாயினும், காரிய ஏதுவால் கருத்திற்குப் புலனுதலின், அஃது உண்டு' என நிறுவி, எய்தியது இகந்துபடாமை இதனுல் காக்கப்பட்டது.

ஏழாவது குறள்,

" இருளின்றேற் றுன்பென் னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்ருகிப் போம் "

எனவரும்.

இதன்பொருள் :- இருள் இன்றேல் துன்பு என் - அக இருளாகிய ஆணவம் இல்லையாயின் ஆன்மாக்கட்குத் துன்பம் உண்டாதற்குக் காரணம் யாது; உயிர் இயல்பேல் – துன்பமும், உயிரிடத்தே உள்ள ஒரு பண்பல்லது, அதனின் வேறாய ஒரு தனிப்பொருள் அன்று எனின்; போக்கும் பொருள் உண்டேல் - துன்பம் அதற்கு மாற்றாய பிற பொருள்களால் நீங்கவும் காண்கின்றோம். ஆதலின், துன்பத்திற்கு மருந்தாய் அதனை நீக்கும் பொருளும் உண்டென்பது பெறப்படுகின்றது; படவே, ஒன்றாகிப் போம் - துன்பமும் உயிரின் இயல்பேயாயின், துன்பம் இல்லையாகின்ற காலத்தில், ஆன்மாவும் அதனோடு இல்லையாய் ஒழியும்.

விளக்கவுரை ;- 'அவ்வாறு இன்மையால் துன்பம் உயிரின் இயல்பன்று; வேறேயாம்' என்பது குறிப்பெச்சம். எனவே 'துன்பத்திற்குக் காரணமான ஆணவம் உயிரின் வேறாய தனி முதலாய் உண்டென்பது அறியப்படும்' என்பது கருத்து. துன்பத்திற்குக்காரணம் அறியாமை என்பது உலகியலிலும் காணப்படுவதே. அதனால், 'துன்பம்' என்பது, அதற்குக் காரணமாகிய அறியாமையின் மேலதேயாம். அறிவேயன்றி, அறியாமையும் உயிருக்கு உளதாதலும், அவ்அறியாமை பின்பு நீங்குதலும் உலகியலிற்றானே அறியப்படுதல் பற்றி, "போக்கும் பொருளுண்டேல்" என அதனை ஏதுவாக வைத்துக் கூறினர். மாறுபட்ட இருதன்மை ஒரு பொருட்கு இருத்தல் இயலாது' என்னும் முடிபினை முரணிக் கூறுவார்முன் கூறுதல் ஏலாமையின், அறியாமை உயிர் இயல்பன்று' என்பதனை வேறோராற்றால் நிறுவினர்.

இதனால், 'ஆணவம் உயிரின் குணம் அன்று; அதனின் வேறாய தனிமுதல் என்பது கூறப்பட்டது.

( தொடரும் )

---

## சொக்கநாத வெண்பா

அருவருப்பே மெத்தியிடும் ஆகத்தைச் சற்றும்
அருவருக்கத் தோற்றுதில்லை ஐயோ—அருவருக்கத்
தோற்றியிடா தென்னவினை துய்ப்பித்த தறுப்பதற்கோ
சாற்றியிடாய் சொக்கநா தா. (23)

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்நாகரம்,
**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

(மலர் 30, இதழ் 7, பக்கம் 384 இன் தொடர்ச்சி)

दापयेद्देवदेवाय उमादेव्यैश्च दापयेत् ।
सकलानां तु देवानां यथा वित्तानुसारतः ॥ — कारणम्

இந்த திரவியங்களைத் தேவிக்கும் ஸமர்ப்பணம் செய்ய வேண்டும். முடிந்த அளவு மற்ற ஸகள பேரங்களுக்கும் அர்ப்பணம் செய்யவேண்டும்.

— காரணாகமம்.

பாயஸான்னம், ஹரித்ரான்னம், எள்ளன்னம், சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் இவைகள் இறைவனின் ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களின் பொருட்டு நிவேதனம் செய்ய வேண்டிய பஞ்சான்னங்கள்.

— காரணாகமம்.

तण्डुलात्त्रिंशतीभागं रजनी चूर्ण संयुतम् ।
जीरकादि समोपेतं किंचिल्लवण संयुतम् ॥
हरिद्रान्नमितिख्यातम् — कारणागमम्

ஹரித்ரான்னமென்பது:

அரிசியின் முப்பதில் ஒருபங்கு மஞ்சள் பொடியுடன் ஜீரகம், உப்பு, நெய் இவைகளுடன் கூட்டி செய்யும் அன்னம்.

— காரணம்.

**இந்த மாதபூஜையின் பலன்:**

நெய் - மோக்ஷம்; கருப்பஞ்சாறு - ஆயுள்விருத்தி, க்ருதகம்பளம் - க்ஷேமாரோக்யம், தயிர் - புத்ரவிருத்தி, மரு - சோபனம், சந்தனம் - சாலோக்ய பதவிப்ராப்த்தி, பழம் -

இஷ்டப்ரதம், அபூபம் - தனலாபம்; அன்னம் - அன்னம் முதலிய சாதனவிருத்தி, பால் - சத்ருநாசம், சக்கரை - விரும்பிய பலன், தீபம் - பிரமஹத்தி முதலிய பாபங்களுடைய நீக்கம், (இன்னும் இந்த மாஸபூஜா விசேஷ விதிகளை சங்க்ரஹ ஸார ரத்னுவளியில் காணலாம்.)

**கிருத்திகா தீபம் :**

ஸௌரமான ரீதியாக கார்த்திகை மாதத்தில் கிருத்திகா நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமியில் செய்யப்படும் தீபோத்ஸவம்,

अर्धास्तमन वेळायां दीपोत्सवं समाचरेत् ।
पर्व नोचेत्तु सन्ध्याया पूर्वेद्यु र्दीपमाचरेत् ॥ — कारणम्

சூரியன் பாதி அஸ்தமனமாகும் காலத்தில் தீபோத்ஸவம் செய்யவேண்டும். சந்தியா காலத்தில் பௌர்ணமி இல்லாவிடில் முதல்நாளே செய்யவேண்டும். பௌர்ணமியுடன் கிருத்திகா நக்ஷத்திரம் கூடியதாக இருந்தாலும் அல்லது பரணி நக்ஷத்திரம் கூடியதாகவிருந்தாலும் தீபத்திற்கு முக்கியம் பௌர்ணமி ஆதலால் பௌர்ணமி திதி இருக்கும் நாளில் செய்யவேண்டும். அந்தப் பௌர்ணமியும் சந்தியா காலத்திலிருக்கவேண்டும். — காரணுகமம்,

பரணியுடன் அல்லது கிருத்திகையுடன் சதுர்த்தசி கூடியதாகவிருந்து அன்று தீபோத்ஸவம் செய்தால் அல்பவிருஷ்டியும், வியாதியும் ராஜ்யக்ஷோபமும் உண்டாகும்.

— காரணுகமம்.

கருங்காலி, சம்பகம், தென்னை, பனை முதலிய ஏதாவதொரு மரத்தை தீபஸ்தம்பத்தின் பொருட்டு கொண்டுவரவேண்டும். கோணலற்றதாய், யௌவனமானதாய் மனோஹரமாயிருக்கும் தீபதண்டத்திற்குரிய மரத்தை ரிஷபத்தின் விரற்பத்தின்பின் அல்லது கோபுரத்தின் எதிரில் துவஜமரத்தின் உயரம் அல்லது ஒன்பது முழம் முதல் இரண்டு இரண்டு முழம் வளர்ச்சியாக இருபத்துஐந்து முழம் வரையில் உயரமுள்ளதாய், 15 அங்குலம் முதல் 20 அங்குலம் வரையிலுள்ள பருமனுள்ளதாயிருக்கவேண்டும். அந்த மரத்தின் உயரத்தை

எட்டு பங்கு பண்ணி ஒருபங்கைப் பூமியில் புதைத்து பூமியின் மேல் அதைச் சுற்றி ஒரு வேதிகை அமைத்து தீபதண்டத்தில் 4 மூலை விருத்தமாக அடித்து அதைச் சுற்றிலும் தென்னை மட்டை, பனமட்டை, பாக்குமட்டை, வாழைமட்டை, தாழை ஏதாவதொன்றைக் கொண்டு கூடாகாரமாக அமைத்து அதற்குத் தெற்கில் அல்லது கிழக்கில் தீபத்தைக் கொண்டு வைக்க வாசல் அமைக்கவேண்டும். எங்கும் தீபமாலைகள் அமைக்கவேண்டும். கோபுரம், மண்டபம், ப்ரஸ்தரம் முதலிய எல்லாவிடங்களிலும் தீபம் வைக்கவேண்டும், அந்த தீபத்திற்குப் பசுவின் நெய் விசேஷமாகும். மரத்திலிருந்து உண்டான தீபம்கூடாது.

சுவாமியின் சன்னதியில் அல்லது யாகசாலையில் ஒன்பது தீபம் பதினொரு தீபம் ஐந்து மூன்று ஒன்று என்று ஏதாவது ஒரு விதானமாக தீபம் ஏற்றி மனோன்மணியுடன் வாமாதி சத்திகள், சதாசிவனுடன் வித்யேச்வரர்கள் பஞ்சப்ரம்மங்கள், தத்துவத்ரயம், சிவன் இவர்களை பூஜித்து உபசரிக்கவேண்டும்.

— சங்க்ரஹசாரரத்னவளி·

இந்த தீபத்தை அங்குர ப்ரதிஸரத்துடன் அதிவாஸமாகவும் வைத்துச் செய்யலாம்.

वामादिशक्तयश्चाष्टौ यजेद्देवीं मनोन्मनीम् ।
सदाशिवादि विद्येशान् विन्यसेत्तु क्रमेणतु ॥
ब्रह्माणि पञ्चदीपेषु शिवदीपे शिवं यजेत् ।

— स्वायंभुवम

उमास्कन्देश्वरं देवं — वातुळे
चन्द्रशेखरं संस्थाप्य सर्वालंकार भूषितम् ।
धूपदीपं हृदादत्वा तांबूलंतु निवेदयेत् ॥ — वातुळम

महेश्वरं समभ्यर्च्य शिबिकोर्ध्वे तु विन्यसेत् ।

— सूक्ष्मागमम

சந்திரசேகரர் சோமாஸ்கந்தர் என்ற ஏதாவது ஒரு மகேச்வர மூர்த்திக்கு அலங்காரம் செய்து பல்லக்கில் புறப்பாடு செய்துவித்து தீபதண்டத்தின்முன் புண்யாகவாசனம் செய்து

தீபதண்டத்தில் மகேச்வரனைப் பூஜித்து நுனிமுதல் அடி வரையில் ஜ்வாலா மாலையாக இருக்கும்படி செய்து ஜ்யோதிர் லிங்கமாகத் தியானம் செய்யவேண்டும்.

दीपान्तेच तद्दण्डं कुठारेणैव छेदयेत्। — वातुले

தீபம் (சுடல் எரிந்தவுடன் அதைக் கோடாரியால் வெட்ட வேண்டும். — வாதுளாகமம்.

சத்திகளுக்கும் மற்ற எல்லாத் தேவர்களுக்கும் தீபா ரோஹம் செய்யவேண்டும். — காமிகம்.

பொரி அவல் இவைகளுடன் பூர்ணமான ஹவிர் நிவே தனம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதினால் விஜயம், ப்ரஜாவிருத்தி, தான்யவிருத்தி, நல்லமழை, ரோகசாந்தி, சோகசாந்தி இவைகள் உண்டாகும். — வாதுளம்.

இவ்வாறு ஒவ்வொரு வருஷத்திலும் செய்யவேண்டும். இது முக்கியமாகப் பசுக்களுக்கு சுபிக்ஷம். — காமிகாகமம்,

ஆசாரியனின் பொருட்டு வஸ்திரம் ஹேமாங்குளியம் முதலிய கொடுக்கவேண்டும். இவ்வாறு செய்யும் கர்த்தா க்ஷேமத்தை அடைகிறான். — சங்க்ரஹசாரரத்னவளி.

(தொடரும்)

---


## "ஞானசம்பந்தம்"

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் முப்பது ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம் அறிந்தது. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளி வருவது. சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலிய வற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருவது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி 'ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் பெறுக.

ஆண்டுச்சந்தா :- உள்நாடு ரூ. 3—00, வெளிநாடு ரூ. 6—00.

செயலாளர்: "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமை ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

# புறப்பாட்டில் புதுமை ஒளி

## புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

திருவள்ளுவர்க்கு ஒப்புச்சொல்ல வேறுயார் இருக்கிருர்கள்? இனங்காணமாட்டாத மனிதமன உணர்வுகள்; புரிந்துகொள்ள முடியாத சமுதாய எண்ணங்கள்; ஆழங்காண இயலா வாழ்வியல் தத்துவங்கள் இவற்றை அவர்போலே யாராலே விளக்க முடிந்தது? சுருங்கச் சொல்லுதல் அழகு என்பது மட்டுமில்லை; அது தேவையுங்கூட என்ற கருத்தை வள்ளுவரைப்போல் சொல்லாமல் சொன்னவர் யார்? சில கருத்துக்களை, சில ஆழமான உண்மைகளை - குறிப்பாக்கிப்போகும் அவர்போக்கில், எல்லார்க்கும் எல்லாவற்றையும் விரித்துவைக்க வேண்டுமென்பதில்லை என்ற ஆழ் நெஞ்சினை இனங்கண்டு கொள்ளமுடிகிறது. எனவேதான், தண்டமிழில் அது இலக்கியமாயினும், இலக்கணமெனப் போற்றிப் பொதிந்து கொள்ளப்பட்டது. வள்ளுவத்தின் ஆழமான கருத்துக்கள் சில, சங்க இலக்கிய கடலிலே முத்தென முகிழ்த்துத் தோன்றிச் சுவையூட்டக்காண்கிறோம்!

பொறுப்புணர்ச்சியற்ற - சமுதாயத்தில் மகிழ்ந்து சிறகடித்துப் பறக்கும் தனிமனிதனைப் பிடித்து, இல்வாழ்க்கை கட்டி சமுதாய மனிதனுக்கி மகிழும் வள்ளுவர், இல்லறக்கடமைகளை வரையறுத்துத்தருகிருர். இல்வாழ்க்கை சுவைதான்; அது தரும் இன்பத்திற்கீடேது! உண்மைதான்! ஆனல், எப்போது? என்ற வினவை முன்னிறுத்திக்கொண்டு, 'நல்ல துணை அமையும்போது' என வாழ்க்கைத்துணை நலம் பேசுகிருர். எத்தனையோ இலக்கணங்கள் - துணையின் தன்மையும் - பண்பும்-பன்னிப் பன்னிப் பேசுகிருர்.

ஏதோஒரு பெருமிதம் - இனங்காணுத ஒரு கருத்து ஒளி, வினத்தொடுக்கிருர். 'இல்லதென் இல்லவள் மாண்பானல்?' அவர் வினவின் உட்பொருள் தெரிகிறது! துணைவி மாட்சிமை மிக்கவளானல் வாழ்க்கையிலே மனிதனுக்கு இல்லாததென்ன இருக்கிறது? எடுத்துக்கொண்ட கருத்தினை இமயம் போல் கூறும் வள்ளுவர்வழக்கம் என்று இதனைத் தள்ளிவிடுவதா? நாம் வியக்கிரேம்! மீண்டும் முன்னே வினவகையில் மனைச் சிறப்புரைத்தவர், அடுத்தும் ஒரு வினத் தொடுத்து அதனையே

வியக்கிறார். 'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனை மாட்சித் தாயினும் என்' அதே கருத்து மீண்டும் வேறு வகையில் வலியுறுத்தப்படுகிறது. 'துணைவி சரியாக அமையவில்லை என்றால்?, என்ற வினாவிற்குச் சீறிக்கொண்டு விடை வருகிறது நாம் நிமிர்ந்து கொள்ளுகிறோம். 'மனை மாட்சியானால் என்ன இல்லை? அவள் மாட்சியற்றால் என்ன இருக்கிறது? 'இது தானே வள்ளுவர் சித்திரம். சிந்தனை சுழல்கிறது. பல்வேறு கூறுபாடுகளால்; எண்ணங்களால், மனிதர்களால் உருவாக்கப் படுவது தனிமனித வாழ்க்கை என்று நம்பியிருக்கிறோம். வள்ளுவரோ இல்லை; இல்லை மனைவியால்தான் வரையறுக்கப் படுகிறது என்கிறார்; எண்ணங்கள் வள்ளுவத்தைப் புரிந்து கொள்ள எங்கெங்கோ பறக்கிறது!

ஈன்றெடுத்த, மக்களது போக்கில் வெறுப்புற்று வடக் கிருந்து உயிர்துறக்கத் துணிந்த கோப்பெருஞ்சோழனை, கண்ணால் காணாது கருத்தால் கண்டிருந்த பாண்டியநாட்டுத் தண்டமிழ்ச்சான்றோர் பிசிராந்தையார் அவனைக்காண வருகிறார். "வருவன் என்ற கோனது பெருமையும் - அது பழுதின்றி வந்தவன் அறிவும்" வியந்து நின்றனர் ஒரு சாரார். வேறு சில நரை மூதாளர்க்கு வியப்பு வேறுவகையாயிற்று. நம் இளமை தொட்டே இச்சான்றோர் பெருமை அறிவோமே! நம்மினும் ஆண்டில் முதிர்ந்து நரை திரை மூப்பொடு தண்டுன்றித் தளர் நடையினராய் இருப்பர் என்றெல்லாம் எண்ணிக்கிடந்தோமே! இஃதென்ன புதுமை! இளைய தோற்றம் - இடைஎழுந்த நரை தோன்றாக் கரியகுஞ்சி! மிடுக்கு நடை! சால்புத்திருமுகம்!

வியப்பு வளவாகிறது; மன்னனுக்கு உற்ற துயரும் மறந்தன ராய், விளங்கி எழுந்த வியப்பில், 'மூப்பின் வருவது நரை' என்ற முடிந்த எண்ணம் முகிழ்த்தவராய், வயது கடந்தும் நரை தோன்றாத புதுமைக்கு வினாத்தொடுக்கின்றனர்.

அவர்கள் நினைத்திருக்கிறார்கள் நரை முதிர்விற்கு அடை யாள மென்று.

பிசிராந்தையார், ஈன்றெடுத்த மக்களே தந்த துயரத்தால் இனங்காணமாட்டா வெறுப்புற்று, உள்ளம் வெதும்பிக்கிடந்த கோப்பெருஞ்சோழனை உள்ளத்தில் நினைகிறார். எண்ணங்கள் கவிதையாக மலர்கின்றன.

சில கருத்துக்கள்; அவை எழுந்த சூழ்நிலையை அறிந்து கொள்ள மாட்டாமையால் விளங்காது போவதுண்டு. அறிவு

நலம்மிக்க சான்ருேர்கள் தம்பாடல் அல்லது, கவிதை எழுதற்குரிய சூழலை முன்னிறுத்திக்கொண்டு தொடங்குவதைச் சங்க கால மரபென்று கருதமுடியும். அவற்றுள், விஞவை முன்னிறுத்திக்கொண்டு விடை கூறுவான்போலே கவிதை தருவதும் ஓர் மரபு. 'வாய்மை எனப்படுவது யாதெனின்' என விஞவை முன்னிறுத்தும் திருவள்ளுவரைப்போலே, புறப்பாட்டுக்காரர்களும் இந்நெறி மேற்கொண்டிருந்தனர். விஞவொடு, விஞ எழுந்த சூழ்நிலையையும் ஒரு சேரவிரிக்கும் பாங்கு புறத்திற்கே தனிச்சிறப்பு. 'சிற்றில் நற்றூண்பற்றி, நின் மகன் யாண்டுளனே என வினவுதியாயின்' என விஞவெடுத்து விடை கூறும் மூதாட்டியை அங்கே சந்திக்கிறேம்.

கேட்ட விஞவிற்கு விடை கூற விரும்பிய பிசிராந்தையார் விஞவை முன்னிறுத்திக்கொண்டு விடை பேச வருகிருர். அது நெறிஎன்பது மட்டுமல்ல; அங்ஙனம் விஞ முன்னிறுத்தப்படவில்லை என்ருல், அப்பாடல் கவிதைக்குரிய முழுமை நயமே பெருது போய்விடுமென்பது தெளிவாகிறது. இஃதோர் அருமைப்பாடு.

தெரிந்த கவிதைதான். கருத்துக்களிலும் ஒன்றும் குழப்பம் கிடையாது. ஆண்டு முதிர்ந்தும் நரை தோன்ருமைக்குக் காரணங்களைக் கூறவருவதுபோலக் கவிதை தெரிகிறது. அந்தக் காரணங்களை ஒன்றுபடுத்திக்கொள்ளாது, வேறு பிரித்து நிறுத்தி, பொதுக்காரணங்களை விலக்கி, சிறப்புக் காரணத்தைக்கண்டு, அது வள்ளுவத்தின் ஆணித்தரமான கருத்திற்கு வலியூட்டுவதை இங்கே காணவருகிறேம்.

'யாண்டு பலவாக' என்று தொடங்கும் புகழ்மிக்க புறப்பாட்டு நெஞ்சத்தில் விரிகிறது.

தண்டமிழ்ச் சான்ருேர் பிசிராந்தையார் நரை தோன்ருமைக்குக் கவலையின்மையே காரணம் என விளக்க வருகிருர். வருபவர், ஒரு வாழும் தனிமனிதனுக்கு எவ்வெவ் வகையில் கவலை தோன்றக் கூடுமென ஆராய்கிருர். அவ்வாய்வின் முடிவில் ஐந்து காரணங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அக வாழ்வும், புறவாழ்வுமாய சமுதாயத்தில் மனிதர்களை வாழவும் தாழவும் செய்யும் காரணங்கள் கவிதையில் ஒருசேர விளக்கப்படுகின்றன. நரை தோன்ருமைக்கு - அஃதாவது கவலை இன்மைக்கு அவர் கூறும் காரணங்களை இப்படி வரிசைப்படுத்தலாம்.

1. மாட்சிமை மிக்க மனைவி
2. அறிவு நிரம்பிய புதல்வர்கள்
3. குறிப்பறிந்தொழுகும் ஏவலாளர்
4. செங்கோல் வேந்தன்
5. நிரம்பிய ஒழுக்கம் வல்ல சான்றோர்கள்

இவர்கள் யாவரும் என் தனிவாழ்வில் எனக்குக் கிடைக்கப் பெற்றனர். எனவே, கவலைக்குரிய கூறுகள் ஏதுமில்லை அதனால் நரை தோன்றாமை பெற்றேன் என்கிறது பிசிராந்தையார் கவிதை.

பிசிராந்தையார் பாடல் எடுத்துக்காட்டும் ஐந்து காரணங்களில் எது வலிமை பெற்று நிற்கிறது என்பதனைப் புதிய கோணத்தில் சிந்தித்துப் பார்ப்பது சுவை பயக்கவல்லது. அவர் விளக்கும் செய்திகளை முதலிலிருந்து தொடங்குவதை விடுத்து இறுதியிலிருந்து எடுத்துக்கொண்டு பார்ப்பது வேண்டத் தக்கதாகிறது.

பாண்டி நாட்டிலிருந்து சோழநாட்டுக்குப் பிசிராந்தையார் ஒருவர்தான் வந்தனர் என்று கருதுவதற்கில்லை. எத்தனையோ முதியவர்கள் பாண்டி நாட்டிலிருந்தும், பிசிராந்தையார் வாழ்ந்த ஊரிலிருந்தும் பலகாலும் சோழநாடுவந்திருத்தல் கூடு மென்பதிலே மறுப்பிருப்பதற்கில்லை. அப்படி வந்த முதியவர்கள் நரை, திரை தோன்றப் பெற்றே இலங்கியிருத்தல் வேண்டுமென்பது, பிசிராந்தையாரைவியந்தமை ஒன்றாலேயே பெறப்படுகிறது.

பிசிராந்தையார் ஐந்தாவதாகச் சொல்லும் காரணம் "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்சான்றோர் - பலர்யான் வாழு மூரே" என்பது. என் ஊரில் கற்பன கற்றுப் புலனடக்கம் வல்ல ஒழுக்கமிகு சான்றோர் பலர் வாழ்கின்றனர் என்பது குறிப்பாகிறது. இந்தக் குறிப்பினை ஆழ்ந்து நோக்குகின்றோம். புதிய எண்ணங்கள் பிறக்கின்றன. பிசிராந்தையார் வாழ்ந்த ஊர் எதுவாயினும், 'பலர் வாழும் ஊர்' என்ற குறிப்பால், அவர் மட்டுமல்லாது நூற்றுக்கணக்கானவர் அங்கே வாழ்ந்தனர் என்பது பெறப்படுகிறது. பிசிராந்தையாரைப் பொறுத்தவரை நரை தோன்றாமைக்கு இதுவும் ஒரு காரணமென்றாலும் இதனைச் சிறப்பாகக் கொள்ளுதற்கில்லை. காரணம், சான்றோர் வாழ்வதே நரை தோன்றாமைக்குக் காரணமென்றால் பிசிராந்தையார் ஊரில் வாழ்ந்தார் யாவரும் ஒப்ப முதுமையிலும் நரை தோன்றாது

இளமைச் செவ்விபெற்று இலங்கிருத்தல் வேண்டும். பிறிதொன்றும் உண்டு; சான்றோர் சூழ வாழ்தல் வேண்டுமென்றால் ஒருவன் தன் இருப்பிடத்தை அதற்குத்தக மாற்றி அமைத்துக் கொள்ளவும் கூடும். எனவே, பிசிராந்தையார் கூறிய ஐந்தாவது காரணம் வலிமை பெற்றிருக்கவில்லை.

'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என்ற நான்காவது காரணம் 'எம் மன்னன் செங்கோல் நெறியினன்' என்ற எண்ண எழுச்சியை விளக்க வருகிறது. இதிலே சிறப்பிற்கு இடமே இல்லை. காரணம், செங்கோல் வேந்தன் நாட்டில் பிசிராந்தையார் மட்டுமில்லை; ஆயிரக்கணக்கானவர் வாழ்ந்திருந்தனர். அவர்களெல்லாம் வியப்புக்குரியராகஇல்லை. எனவே மன்னன் செங்கோல் ஆட்சி என் நரை தோன்றாமைக்குக் காரணம் என்ற பிசிராந்தையார் எண்ணம் பொதுத்தன்மையுடையதாக நின்று வலிமையிழக்கிறது.

ஒரு நிகழ்ச்சி, அல்லது செயலுக்குக் காரணங்கள் பல போல தோன்றக்கூடும். ஆனால், உண்மைக் காரணம் ஒன்றாக இருப்பதை நுண்ணிதின் ஆயவல்லார் கண்டுதெளிவர் இந்த எண்ண வளத்தின்மேல் நின்று மூன்றாவது காரணத்தை நினைகிறோம். அதுவும் வளமை குன்றிவிடுகிறது.

'யான் கண்டனையர் என்னிளையரும்' எனப் பேசி, குறிப்பறிந்தொழுகும் ஏவலாளர் வாய்க்கப்பெறுவதும் ஒரு காரணம் எனக் காட்டமுயலும் முயற்சியை வியக்கிறோம். குறிப்பறிந்தொழுக வல்ல 'இளையர்' கிடைக்கப்பெறுவது அருமையாயினும், அது கிடைக்க இயலாத தொன்றன்று. தன் எண்ணவழி ஒழுகா ஏவலரை விரைந்து மாற்றி, தக்காரொருவரை அமைத்துக் கொள்வதும் இயலாததொன்றன்று. அத்தொடும்கூட பிசிராந்தையார் சுட்டும் ஏவலாளர் பலர். அவருள் சிலரை வேறு சிலரும் ஏவலாளராகப் பெற்றிருக்கவும் - அல்லது பெற்றுக்கொள்ளவும் இயன்றிருக்கும். எனவே இவ்வகையிலும் நரை தோன்றாமைக்குப் பிசிராந்தையார் சுட்டும் காரணம் சிறப்புடையதாக அமையாது துணைக் காரணங்களுள் ஒன்றாகவே அமைகிறது.

இதற்கு மேலே, சற்று நிதானித்து எண்ணுகிறோம். எஞ்சிய இரண்டு காரணங்களை எண்ணிக்கைக்காக இரண்டு என்று எடுத்துக்கொண்டாலும், ஆசிரியர் அவற்றைக் கூறும் முறை

வேறுபடுத்திப் பார்க்கத்தக்கதாக இல்லை. கடைசி மூன்றையும் தனித் தனிக்கூறுவார் இவற்றை ஒன்றுபடுத்திக் காட்டுகிறார். அவை அங்ஙனம் காட்டத்தக்கனவென்பதால்.

'மாண்ட என்மனைவியோடு மக்களும் நிரம்பினர்' எனப்பேசினும் இருகாரணங்களுக்குள்ளும் ஓர் இணைப்பைக் குறிப்பாக்குகிறார். 'ஓடு' என்ற மூன்றும் வேற்றுமை உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வரக்காண்கிறோம். 'ஓடுஎன் உருபு உயர்பின் வழித்தே' என்ற தொல்காப்பியமும் நினைவுக்குவருகிறது. ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான் என்பது மரபு. ஆசிரியனொடு இணைத்தமை மாணாக்கன் என்ற சிறப்பினை இளைஞன் பெறக்காரணமாயிற்று எனக் காணமுடிகிறது. 'தாயைப் போலப் பிள்ளை' என்ற பழமொழியை நினைவு கூர்கிறோம். பிசிராந்தையார் மக்கள் அறிவு நிரம்பப்பெற்றனர் என்றாலும் அது தாய்வழி வந்த சிறப்பெனக் குறிக்கப்படுவது தெரிகிறது. அத்தொடு மக்களும் என்பதன்கண் வந்த இறந்தது தழீஇய எச்சஉம்மை மனைவியும் குணநலன்களால் நிரம்பப்பெற்றனள் எனத் தழுவப்பட்டு மனைவிக்குச் சிறப்பேற்றுதலை விளக்கி நிற்கிறது. வேந்தனொடு வேடனும் வந்தான் என்பதின் உம்மைபோல இந்தத் தொடரைப் பொருள்கொண்டு மகிழ முடிகிறது.

எனவே, மக்கள் அறிவு நிரம்பப் பெற்றதற்கும், அவர்தம் செயற்பாடுகட்கும் தாய் நலம் இன்றியமையாதது என்பதும் உம்மையால் வலியுறுத்த வருவது சிறப்பாக மக்கள் நலமன்று என்பதும் குறிப்பின் விளக்கப்படுகிறது.

எனவே, சான்றோரும், மன்னனும், இளையரும், புதல்வரும் என்னும் நால்வரது நலன்களும் ஒருவனது செம்மை சான்ற நிறைந்த வாழ்விற்குக் காரணமென்றாலும் இவற்றுள் மூன்று பலர்க்கும் எளிதில் அமைவதால் பொதுத்தன்மையுடையதாய் நின்று வலிமை இழந்துவிடுவதைக் காண்கிறோம்.

எஞ்சிக் கிடக்கும் ஒரே காரணம், மாண்ட என் மனைவி; 'நிரம்பிய மனைவி' யாய் நின்று என் அகவாழ்வில் ஏற்றிய ஒளியே என் மகிழ்விற்கும், முதுமை தோன்றா என் எழிலுக்கும் காரணம் என்பதனைப் பிசிராந்தையார் சிறப்பிக்கும் அருமைப் பாட்டில் இருக்கிறது.

மக்கட் சிறப்பும் மனைவியால் ஆக்கமுறுவது என்பதனாலும், ஊழ்வகையால் அமைந்து, பின்னே நினைந்தாலும் மாற்றிக் கொள்ள முடியா மரபு வழிபட்ட சமுதாய அமைப்பாலும், எத்துணைப் புறக்காரணங்கள் அமைந்தன என்றாலும் அக வாழ்வில் ஏற்படும் ஊனம் மனிதனைப்பெரிதும் தாக்கித்தகர்த்து விடுமென்பதனாலும், அறிவாற்றல்களால் மிக்கு, சமுதாய நடை முறைகளை இனங்கண்டு, அதற்குத்தகத் தம்மைமாற்றி அமைத்துக்கொள்ளும் மனவலிபடைத்த வல்லாளர்கட்கும் அக வாழ்வின் தளர்வு ஊக்கஞ்சிதைத்துவிடு மென்பதனாலும் பிசிராந்தையாரால் குறிப்பாக விளக்கப்படுவது மனைச்சிறப்பே என்பதனை இச்சிறந்த புறப்பாட்டின் உயிர் நாடியாகக் கண்டு மகிழ்வதிலே என்ன தவறிருக்க முடியும்?

'தாரமும் - குருவும் தலைவிதி வசத்தால்' என்ற இத்தமிழ் மண்ணின் பழமொழி இங்கே சிந்தனையைத் தொடுகிறது.

சில வாழ்வியல் உண்மைகளை வெளிப்படையாகச் சொல்லி விடுவது விரும்பத்தக்கதல்ல என்று கருதிய கருத்தால், வேறு சில காரணங்களையும் உடன் இணைத்துக்கொண்டு ஆசிரியர் பிசிராந்தையார் இப்பாடலை விளக்கினும், அதன் உயிர்நாடிச் சிறப்பு மனைச்சிறப்பிலேயே தேங்கிநிற்கிறது என்பது புலப் படாது போதற்கில்லை.

இங்கே, திருவள்ளுவரை மீண்டும் நினைக்கிறோம். மனை மாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் என்? என்ற குறளின் பொருள் இங்கே மறைமுகமாக விரித்துரைக்கப்படுகிறது. அதன் முடிவில் 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்ற தொடரின் உட்பொருள் விளங்கித் தோன்ற, பிசிராந்தையார் பாடலில் மனைச்சிறப்பின் பெருமை பேணப்படுவதும், அது சிறவாக்கால் 'உள்ளதென் இல்லவள் மாணாக்கடை' என்றதனால் எஞ்சிய புறக்காரணங்கள் யாவும் மனைச்சிறப்பில்வழி பயன்படா என்பதுவும் வலியுறுத்தப் படுவது சிந்தனைக்கு விருந்தாகிச் சிறக்கிறது.

எனவே, அகவாழ்விற்பெறும் வெற்றியாலேயே மனிதனின் இளமையும் பெருமையும் நிலைபெற்றிலங்குகின்றன என்பதனை இப்புறப்பாட்டு மறைமுகமாக விளக்கவந்து, திருக்குறள் கருத்துக்குப் புதுமை ஒளி ஏற்றுவதை நினைந்தின்புறுவோம்.

---

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாடு, குருபூஜை விழாவை ஒட்டி 5—6—71 முதல் தொடங்கி பத்து நாட்களுக்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

முதல் திருநாள் 5—6—71 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கப்பெற்றது. தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். சங்க நூல்களைப்பற்றிய கருத்தரங்கத்தைத் தமிழக அரசு, பொதுநலத் துறை அமைச்சர், மாண்புமிகு. திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்துச் சங்கநூல் நலம் பற்றிச் சுவையுடன் எடுத்துரைத்து விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். ( அமைச்சரின் தொடக்கவுரை சென்ற இதழில் தனியே வெளியிடப்பட்டுள்ளது. )

தொடக்கவுரைக்குப் பின், அண்ணாமலைப் பல்கலைக்கழக, மொழியியல்துறை இயக்குநர். திரு. ச. அகத்தியலிங்கம், எம். ஏ., பி. எச்டி, அவர்கள் 'தொல்காப்பியமும் - மொழியியலும்' என்ற பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்தினர்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ., அவர்கள் 'குறிஞ்சிக் காட்சிகள்' என்ற தலைப்பில், ஐந்திணையுள் குறிஞ்சி பெறும் சிறப்பிடம் பற்றி விரிவுரையாற்றிச் சிறப்பித்தார்.

இறுதியாக, வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தான கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'நாலடியார்' என்ற பதினெண்கீழ்க் கணக்கு' நூல் பற்றி உரை நிகழ்த்தினர்கள்.

இரண்டாந் திருநாள் கருத்தரங்கமாக 6—6—71 ஞாயிற்றுக் கிழமை மாலை ஆறு மணிக்குத் தொடங்கப்பெற்றது.

திரு. க. அறிவழகன், எம். எல். சி. அவர்கள் சங்கநூல்கள் என்ற தலைப்பில் பேசுகையில் எட்டுத்தொகை, பத்துப் பாட்டாகிய நூல்களுள் ஐந்திணை வாழ்க்கை எங்ஙனம் சிறந்திருந்தது என்பதனை, சில அருமையான அகப் பாடல்கள் துணை கொண்டு விளக்கினர்கள்.

கருத்தரங்கில் அடுத்துப் பங்குபற்றிய திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. இரா. இராதா

கிருஷ்ணன், எம். ஏ., அவர்கள் 'சங்க நூல்களுள் அறநெறி' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் திருக்குறள் சுட்டும் அற வாழ்வு சங்க நூல்களுள் விரிவாகப் பேசப் படுவதனை விதந்து, பண்டைத் தமிழரின் நெறிமுறைப்பட்ட அறவாழ்க்கையினைப் படம்பிடித்துக் காட்டினர்.

இறுதியாக திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம், வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'நான்மணிக்கடிகை' என்ற பதினெண் கீழ்க் கணக்கு நூல்பற்றி விரிவுரையாற்றிய பின் வாழ்த்தொடு இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இரவு பத்துமணி யளவில் இனிதே நிறைவெய்தின.

மூன்றாந் திருநாளும் கருத்தரங்கமாகவே 7—6—71 திங்கட் கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கப்பெற்றது. சங்க நூல் களும், காப்பியங்களும் அன்றைய கருத்தரங்கில் ஆயப்பெற்றன.

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'சங்க நூல்களுள் பாலைக் காட்சிகள்' என்ற பொருள் பற்றி விரிவுரை யாற்றினர்கள்.

அடுத்து, திருச்சி தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் புலவர். திரு. கு. திருமேனி எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் சங்க நூல்களுள் நெய்தற் காட்சிகள் என்ற பொருள்பற்றிப் பேசுகை யில் 'இரங்கல்' என்ற உரிப்பொருட் சார்புடைய நெய்தல் நில வாழ்க்கையினை அழகுற விளக்கிக் காட்டினர்.

இறுதியாக, அண்ணாமலைநகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர், வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள் 'ஐம்பெருங் காப்பியங்கள்' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் சங்கம் மருவிய காலத்தெழுந்த ஐம்பெருங் காப்பியங்களுள் சங்கநூற் சார்புகள் அமைந்துகிடக்கும் முறையினை ஒப்புமை வகையால் எடுத்துக் காட்டி விளக்கினர்கள். பின்னர் 9–30 மணியளவில் வாழ்த்தொடு கருத்தரங்கம் இனிதே நிறைவெய்தியது.

நான்காந் திருநாள் பட்டிமண்டபத் திருநாளாக 8—6—71 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கப்பெற்றது. தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முன்னாள் முதல்வர் செந்தமிழ்ச் செம்மல், திரு. அ. சீநிவாசராகவன், எம். ஏ.. அவர்கள் நடுவ ராக அமைந்தார்கள். கம்பன் காவியம் சிறப்பது இலக்கிய

நயத்தாலா? பாத்திரப் படைப்பாலா? என்ற தலைப்பில் பட்டி மண்டப விவாதம் தொடங்கியது.

இலக்கிய நயத்தாலேயே கம்பன் காப்பியம் எழுந்து நிற்கிறது என்ற கருத்தை வலியுறுத்தி, புத்தனம்பட்டி நேருஜி நினைவுக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. அ. வ. இராச கோபாலன், எம். ஏ., அவர்களும், மாயூரம், அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. விசுவநாதன், எம். ஏ., அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், புலவர், திரு. சோம. இளவரசு அவர்களும் வாதிட்டனர்.

பாத்திரப் படைப்பாலேயே கம்பன் காப்பியம் பண்பட்டு நிற்கிறது என்ற கருத்தை வலியுறுத்தி, திருச்சி, தேசியக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சோ. சத்தியசீலன், எம். ஏ., அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. சு. சாமிஐயா, எம். ஓ. எல். அவர்களும், விசயமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், புலவர். திரு. மு. சுப்பிர மணியம் அவர்களும் வாதிட்டனர்.

இருதரப்பு வாதங்களையும் நெடுநேரத்திற்கு ஆழமாக ஒப்பிட்டுச் சீர்தூக்கிய நடுவர் கம்பன் காவியம் ‘இலக்கிய நயத்தாலேயே’ சிறந்து நிற்கிறது என்ற தீர்ப்பினை வழங்கினர். வாழ்த்துக்குப் பின் இரவு 10-30 மணி அளவில் பட்டிமண்டபம் இனிதே நிறைவெய்திற்று.

ஐந்தாந் திருநாள் கவியரங்கமாக 9—6—71 புதன்கிழமை மாலை 6 மணியளவிற்குத் தொடங்கப்பெற்றது. திருக்குறட் கவியரங்கமாக அமைந்த விழாவிற்குத் திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார், எம். எல். சி.) அவர்கள் தலைமை ஏற்று, வள்ளுவர் மாண்பினை வளங்கொழிக்கும் கவிதைகளால் வடித்துத் தந்தார்கள். (அவர்களது தலைமைக் கவிதை கடந்த 10—6—71 ஞானசம்பந்தம் இதழில் முழுவதும் வெளிவந்துள்ளது.)

திருவள்ளுவரை அறநெறியாளராக்கிக் கவிதை தந்தவர் காரைக்குடி கவிஞர் திரு. முடியரசன் அவர்கள். கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். பாவலரேறு திரு. ச. பாலசுந்தரம் அவர்கள் திருவள்ளுவரைத் தம் கவிதையுலகத்தில் ‘இன்பியற் பாவலர்’ எனப்பாடி எண்ணம் நிறைத்தார்.

வீட்டுநெறி காட்டும் வித்தகராகத் திருவள்ளுவரைத் தேனொழுகு செந்தமிழ்க் கவிதைகளால் பாடிச் சிறப்பித்தார் மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்விரிவுரையாளர், செஞ்சொற் கொண்டல் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., அவர்கள்.

விழாத் தொடக்கத்தில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் எம். எல். சி. அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்று, கவிதையிலேயே நன்றி கூறவும் வாழ்த்தொடு கவியரங்கம் இரவு 9 மணியளவில் நிறைவெய்தியது.

ஆறுந் திருநாள் பட்டிமண்டபமாக மலர்ந்தது. 10—6—71 வியாழக்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னை கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச் செல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ., அவர்கள் தலைமையில் தொடங்கியது.

மாயோன் அவதார மாண்பு இராமாயணத்திற் சிறந்து நிற்கிறதா? பாரதத்தில் சிறந்து நிற்கிறதா என்ற சுவையான விவாதம் பட்டிமன்றக் கருவாக அமைந்தது. இராமாவதாரச் சிறப்பினை வலியுறுத்திச் சென்னை திரு. ஔவை. து. நடராசன், எம். ஏ., எம். லிட்., அவர்களும், திருச்சி தனிப்பயிற்சிக் கல்லூரி, இலஞ்சி, திரு. முத்துக்குமாரசாமி அவர்களும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை, வித்துவான். திருமதி. ப. நீலா அவர்களும் வாதிட்டனர்.

மாயோன் அவதார மாண்பு கிருஷ்ணவதாரத்தில் சிறந்து மிளிர்கிறது என்ற வாதத்தை மதுரைப் பல்கலைக் கழகம், டாக்டர், திரு. தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி., அவர்களும், திருச்சி, பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர். திரு. மு. கணபதி அவர்களும், மாயூரம் தேசிய உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. ஆ. இராமபத்திரன் அவர்களும் எடுத்து நிறுத்தினர்.

இருதரப்பு விவாதங்களையும் சீர்தூக்கி ஆய்ந்த நடுவர் அவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி மாயோன் அவதார மாண்பு இராமாயணத்திலேயே சிறந்துநிற்கிறது என்று தீர்ப்புக் கூற, நன்றிக்குப்பின் வாழ்த்தொடு இரவு 10 மணி அளவில் பட்டிமண்டபம் இனிதே நிறைவுற்றது.

ஏழாந் திருநாள் திருமுறைக் கருத்தரங்கமாக 11—6—71 வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்குத் தொடங்கப்பெற்றது.

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் திருமுறைகளில் 'புதிய சிந்தனைகள்' என்ற தலைப்பில் நுணுக்கமான செய்திகள் பலவற்றைத் திருமுறைகளிலிருந்து சுவைபடத் திரட்டித்தந்தார்.

திருமுறைகளில் அமைந்துகிடக்கும் வரலாற்று ஒளிக்கீற்றல்களை இனங்கண்டுகாட்டி, நுணுக்கம்மிக்க உரையொன்றினை அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைப்பேராசிரியர். திரு. க. வெள்ளைவாரணனுர் அவர்கள் நிகழ்த்தினுர்.

திருமுறைகளில் சாத்திரப்பேறு என்பது பற்றித் திருச்சி ஜமால்முகமது கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் புலவர். திரு. ஆதி. முருகவேள் எம். ஏ., அவர்கள் சிறப்புரை ஆற்றியபின் வாழ்த்தொடு மாநாட்டு நிகழ்ச்சிகள் முற்றின.

இரவு ஒன்பது மணி அளவில் தருமையாதீன வித்துவான் பாகவதர். ஸ்ரீரங்கம். எம்பார் ஸ்ரீமத் விஜயராகவாச்சாரியார் தம் குழுவினருடன் 'ஸ்ரீ குருஞானசம்பந்தர்' அருள் வரலாற்றினை இன்னிசைக் கதையாக்கி கதாகாலட்சேபமாக நிகழ்த்திச் சிறப்பித்தார்.

எட்டாந் திருநாள் தருமையாதீனக் குருமுதல்வர் திருவாய் மலர்ந்தருளிய சிவபோக சாரத்தில் இடம் பெற்ற 'என்னை அறிவென்றுன்' என்று தொடங்கும் பாடல் பற்றிய சாத்திர நோக்குடைய உரையரங்கமாக 12—6—71 சனிக்கிழமை மாலை ஆறு மணிக்குத் தொடங்கப்பெற்றது.

'அறிவு' என்ற பொருள் பற்றித் தருமையாதீனப் புலவர், தேவகோட்டை. பாலகவி. வயிநாகரம். திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் சாத்திர நுணுக்கம் மிக்க உரை ஒன்றை நிகழ்த்தினுர்.

சித்தாந்தக் கலைச்செல்வர். திருவாவடுதுறை ஆதீன வித்துவான். திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., அவர்கள் 'சிவம்' என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்தினுர்.

சென்னை 'திருக்கோயில்' ஆசிரியர். சித்தாந்தப் புலவர். மணி, புலவர். திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., அவர்கள் 'பாசம், என்ற பொருள் பற்றி உரையாற்றியதற்குபின் வாழ்த்தொடு சிவபோகசார உரையரங்கம் இரவு ஒன்பது மணிக்கு நிறைவுற்றது.

ஒன்பதாந் திருநாள் 13—6—71 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஆறு மணிக்குக் கருத்தரங்கமாகத் தொடங்கியது.

முதற்கண், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'இருமைப்பயன்' என்ற பொருள்பற்றி உரையாற்றினார்கள்.

திருமுறைகளில் 'மொழி ஏற்றம்' என்பது பற்றித் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர். சிவநெறிச் செல்வர் வித்துவான் திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் நுணுக்கம் மிக்க உரையாற்றி முதற்கண் சிறப்பித்தார்.

அடுத்துத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர். திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர். வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் திருமுறைகளில் 'இயற்கை எழில்' என்ற தலைப்பில் நானில வருணனைகள் திருமுறை ஆசிரியர்களால் படம் பிடித்துக்காட்டப்படும் அழகினைப் பல பாடல் துணைக்கொண்டு இனிதெடுத்து விளக்கினர்.

இறுதியாக திரு இந்தளூர் ஸ்ரீ பரிமளரங்கநாதசுவாமி தேவஸ்தானம், இறைபணியாளர் திரு. ஆர். அரங்கசாமி பி. எஸ்சி., பி. எல்., அவர்கள் வழிபாட்டுச் சிறப்பு என்பது பற்றிச் சிறப்புரை ஆற்ற வாழ்த்தொடு விழா நிகழ்ச்சிகள் இரவு ஒன்பது மணியளவில் நிறைவெய்தின.

பத்தாந் திருநாள் 14—6—71 திங்கட்கிழமை காலை பத்து மணி அளவில் தொடங்கப்பெற்றது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ் இலக்கியச் செம்மல். டாக்டர். திரு. ந. சஞ்சீவி, எம். ஏ., பி. எச்டி அவர்கள் "குருவருள்" என்பது பற்றிச் சிறப்புரையாற்றினர்.

பட்டணப்பிரவேசத் திருநாள் 15—6—71 செவ்வாய்க்கிழமை காலை பத்து மணியளவில் தொடங்கப்பெற்றது.

தருமையாதீனப் புலவர். நாகை தேசிய உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர். வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் சிவபோகசாரம் பற்றி உரை நிகழ்த்தினர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் 'ஞானப் பிரகாச மாலை' என்ற பண்டார சாத்திரம் பற்றி உரையாற்றினர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் பண்டார சாத்திரங்களுள் ஒன்றாகிய 'நவரத்தின மாலை' என்ற சிற்றிலக்கியம் பற்றிச் சிறப்புரை ஆற்றினர்.

அடுத்துத் தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. வே. கண்ணப்பன் அவர்கள் 'சொக்கநாத வெண்பா' என்னும் நூல் பற்றி விளக்கவுரை செய்தார்.

இறுதியாகச் சீர்காழித் தமிழாசிரியர். வித்துவான். திரு. முருகையா தேசிகர் அவர்களும், திருக்கருகாவூர் திரு. சிவஞானம் அவர்களும், சிறப்புரையாற்றியதற்குப் பின்னர் பகல் பன்னிரண்டு மணியளவில் காலை நிகழ்ச்சிகள் முற்றின.

அன்று மாலை நிகழ்ச்சியாக அமைக்கப்பெற்ற கருத்தரங்கில் திருவாரூர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களும் சென்னை மாநகராட்சி முன்னாள் தமிழாசிரியர். வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களும் கலந்துகொண்டு சாத்திர தோத்திர கருத்துக்கள் பலவற்றையும் விளக்கி இனிதே உரை நிகழ்த்தினர் வாழ்த்துக்குப் பிறகு விழா நிகழ்ச்சிகள் யாவும் இரவு[illegible] மணியளவில் இனிதே நிறைவெய்தின.

ஒவ்வொரு நாளும் தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறிச்சிறப்பித்தார்கள். மாநாட்டுத் தொடக்கத்தில் திருமுறைவாணர்களால் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப் பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் எழுந்தருளி வந்திருந்து, மாநாட்டில் பங்குபற்றிய பெருமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பித்தருளினூர்கள்.

மாயூரத்திலிருந்தும் சுற்றுப்புறச் சிற்றூர்களிலிருந்தும் ஆண்களும் - பெண்களுமாகப் பெருமக்கள் பலரும் வந்து கேட்டு மாநாட்டில் பங்குபற்றி மகிழ்ந்தார்கள்.

மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக இரவு ஏழுமணியளவில் தருமையாதீன இசைப் புலவர். இசையரசு. திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினரால் இன்னிசை விருந்தளிக்கப்பெற்றது.

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



அஷ்ட கஜ பூஜை

# செய்திகள்

### தருமையாதீனத்தில்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 14—6—71 திங்கட்கிழமை மிக்க சிறப்புடன் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் காலை 5 மணி அளவில் மேலைக்குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்தத்தையும் மற்றும் உள்ள குருமூர்த்தங்களையும் தரிசித்து திருமடத்திற்கு எழுந் தருளினார்கள்.

பின்னர் காலை 9 மணி அளவில் ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்தன. அன்பர் கள் பலர் வந்து வழிபட்டு திருநீற்றுப்பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். குருபூஜை விழாவை முன்னிட்டு ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய எட்டு நூல்களும் தொகுப்பாக ஸ்ரீ "குருஞான சம்பந்தர் அட்டகம்" என்ற பெயரில் வெளியிட்டு வழங்கப் பட்டன. இந்நூல்கள் பண்டார சாத்திரம் என்று வழங்கப் பெறும்.

பின்னர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய இடமாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சிறப்பாக அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. அபிஷேகம் நடை பெறுகின்ற காலத்தில் ஓதுவா மூர்த்திகள் திருமுறைப் பாராயணம் செய்தனர். ஸ்ரீ ஞானபுரீசுவரருக்குப் பஞ்சமுகார்ச் சனை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டு அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினார்கள். நண்பகல் மாகேசுரபூஜை சிறப்பாக நடைபெற்றது.

மாலையில் 6 மணியளவில் நாதசுர இன்னிசைகளின் ஒலி எழுந்தன. அதிர்வேட்டுகள் ஒலித்தன; எடுபிடிகள் எல்லாம்

மடாலயத்தின் முகப்பில் வரிசையாக நிறுத்தப்பெற்றன. அன்பர்கள் பலர் குழுமி சூழ்ந்துவர ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளி குருமூர்த்த தரிசனம் முடித்துக்கொண்டு மீண்டருளினார்கள், ஸ்ரீ தருமபுரீசர் திருக்கோயில், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயில், ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் தரிசனம் முடிந்து 9 மணி அளவில் திருமடாலயத்திற்கு எழுந்தருளினார்கள்.

பின்னர், ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாட்டிற்கு எழுந்தருளி சிறப்பு வழிபாடு நிகழ்த்தினார்கள். வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைக் கொலுவிருத்தி பாவனாபிஷேகம். அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தி கொலுவழிபாடு நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலர் வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். அடுத்து. ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பாகச் செய்யப்பெற்று நிவேதனமாகியதிருமெய்ஞ்ஞானம் அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.

15—6—71 செவ்வாய்க்கிழமை பட்டணப்பிரவேசத்திருநாள், அன்று ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் வழிபாடும், அடுத்து மாகேஸ்வர பூஜையும், இரவு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் பட்டணப்பிரவேசக் காட்சியும் கொலுக்காட்சியும் சிறப்புற நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் கலந்துகொண்டு வழிபட்டு மகிழ்ந்தனர்.

---

## விசேஷ நாட்கள்

### 15—7—71 முதல் 7—8—71 முடிய

| | |
|---|---|
| 15—7—71 | ஏயர்கோன்கலிக்காம நாயனர் திருநக்ஷத்திரம் |
| 18—7—71 | வேளூர்க் கிருத்திகை |
| 19—7—71 | பிரதோஷம் |
| 20—7—71 | கூற்றுவ நாயனர் திருநக்ஷத்திரம் |
| 22—7—71 | ஆடி அமாவாசை, கயிலைக்கண்ட திருநாள். |
| 26—7—71 | ஆடிப்பூரம் |
| 29—7—71 | குறும்பநாயனர் திருநக்ஷத்திரம் |
| 30—7—71 | சுத்தரமூர்த்திசுவாமிகள், சேரமான்பெருமாள் நாயனர் திருநக்ஷத்திரம் |
| 2—8—71 | கலியநாயனர், கோட்புலிநாயனர் திருநக்ஷத்திரங்கள் |
| 4—8—71 | பிரதோஷம் |
| 6—8—71 | சந்திரக்கிரஹணம் |
| 7—8—71 | காயத்ரீஜபம் |

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

(விரோதிகிருதுஸு ஆடிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—7—71 முதல் 16—8—71 முடிய)

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி பலன் சுபமாகும். எதிர்பார்த்திருந்த காரியங்கள் சுலபமாய் சாத்தியமாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் அனுயாசமாய்க் கிடைக்கும். ஜீவனம் ஓங்கும். ரணநிவர்த்தி ஆகும். இல்லற சுகமும் புத்திராதிகளால் நன்மையும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி மிஸ்ரபலனைத் தரும். மாத ஆரம்பத்தில் சகல காரியங்களும் தவக்கப்படும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். வியாதி நீங்கும். வரவு, செலவு சமனாகும். நூதன முறையில் தொழில் பழக்கம் ஏற்படச்செய்யும். மேலோர், பெரியோர்களின் அன்பினால் சகலமும் சுலப சாத்தியமாகும். திங்கள், செவ்வாய் நலன் தரும்.

**3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி பலன் சுபமாகும். அடிக்கடி சஞ்சாரபலன் ஏற்படும். கிரய விக்கிரயங்கள் மூலமாகவும், உத்தியோக மூலமாகவும் ஜீவனம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். விவகாரம் ஜெயிக்கும். புதன், வியாழன். சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி பூர்ண சுபத்தைத் தரும். விவசாயம் ஓங்கும். தனதான்ய விருத்தி ஏற்படும். கட்டிட வேலைகளும், நூதனமாகத் தொழிற்சாலையும் ஏற்படச்செய்யும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

ஆரம்பத்தில் படிப்புக்கு தவக்கமும், உத்தியோகத்தில் சில மாறுதல்களுடன் மேற்பதவியும், இல்லற சுகமும், ஸ்தாவர ஜங்கம விருத்தியும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கச்செய்யும். பொருளாதாரத்தில் சிரமத்தைக் காட்டிக்கொண்டே இருக்கும். ஞாயிறு, திங்கள் நன்மையைத் தரும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி பலன் சுபத்தைத் தரும். விஞ்ஞானரீதியில் பலவித நூதன தொழிற்சாலைகள் ஏற்படுதலும், கட்டிடங்கள் விருத்தி ஆகுதலும், வியாதி சாந்தியும், விவசாய விருத்தியும், தனதான்ய சமிர்த்தியும், சகல காரியங்களும் சுலபசாத்தியமாகும். தெய்வசக்தி பிரகாசிக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிக உழைப்பும், குடும்பத்தில் பலவிதமான சிரமங்களும், அடிக்கடி வைத்திய செலவுகளும், காரியங்களில் தவக்கமும் ஏற்படும். தெய்வபலத்தை முக்கியமாக நினைப்பவர்களுக்கு எல்லாம் சுபமாகவே இருந்துகொண்டு இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தெய்வபலம் பிரகாசிக்கச் செய்யும். கிராமங்களில்-நகரங்களில் தலைவர் பதவி உண்டாகும். எல்லாக் காரியங்களும் சுலபமாக சாத்தியமாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.**

தனுர்ராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். பலவிதமான தொழில்களின்பேரில் பொருளாதாரத்தில் பலவிதமான நன்மை ஏற்படும். புத்திரர்களாலும் ஸ்நேகிதர்களாலும் குடும்பத்துக்கு நன்மை உண்டாகும். கடன் நீங்கும். கிரகசுகம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் விசேஷமாக சுபராஜயோகத்தைத் தரும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். புதிதான கிரக லாபம் கிடைக்கும். இல்லற சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினுல் எல்லாம் சுலபமாக சாதிக்க முடியும். புதன், வியாழன் சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,**

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தீராத வியாதி நிவர்த்தியாகும். கிரய விக்ரயங்கள் அதிகமாகும். பொருளாதார விஷயங்களில் சிக்கல்கள் இருந்துகொண்டே இருக்கும். புத்திராதிகளாலும் தொழில் மூலமாயும் அடிக்கடி கவலை உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக பிரபுக்கள் சிநேகம் ஏற்படும். விசேஷமான வித்யா பலத்தால் அனேகருடைய சிநேகம் அதிகமாகும். வியாதி நிவர்த்தியாகும். ஆரோக்யம் உண்டு பண்ணும், பொருளாதாரம் அதிகமாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

விரோதிகிருது வருஷம் ஆடிமாதம் தக்ஷிணாயனம் 16—7—71 இரவு ஆனிமீ 32ந் தேதி சுக்கிரவாரம் உதயாதி 49 நாழி 11 விநாடிக்கு கடகராசியில் ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் பிரவேசம் செய்கிருர். இதனடியில் தக்ஷிணாயன பிரவேசகால ஜகஜ்ஜாதக சக்கிரமும் அதன்பயனும்.

1, அயன பிரவேச லக்கினம் மேஷம்

2. பிரவேச நக்ஷத்திரம் பரணி 2ம் பாதம்

3. ராஜா சநிக்கு மற்றொரு ஆதிபத்யம்

| | | | |
|---|---|---|---|
| | ல / சந் | சநி | சுக்கிரன் |
| செவ் | ஜகஜ்ஜாதக ராசிச்சக்கிரம் ஆனிமாதம் 2ந் தேதி சுக்கிரவாரம் தக்ஷிணாயனபுண்ணிய காலம் | | சூரியன் புதன் கேது |
| ராகு | | | |
| | குரு | | |

ஸஸ்யாதிபத்தியத்தோடு, மித்ரராசியில் ஸஞ்சாரத்துடன் தான்யாதிபதி குருவால் பார்க்கப்பட்டும் சந்திரனைத்தவிர மற்ற எல்லாக் கிரகங்களும் ராஜாவான தனக்குக் கேந்திர திரிகோண உபசயங்களில் அமைந்தும் பிரவேசகாலம் இரவிலும் ஏற்பட்ட படியால் ஷை தக்ஷிணாயனத்தில் ஏற்படக்கூடிய முதல் போகம் மறுபோகம் ஸஸ்ய தான்யாதிகள் எவ்வருஷத்தையும்விட விசேஷமாய் விருத்தியாகி உணவுப் பொருள்கள் பிரஜைகளுக்குச் சந்தோஷத்தைத் தரும்,

குறிப்பு ,- செவ்வாய்க்கு இவ்வருஷத்தில் சைன்யத்துக்கு ஆதிபத்தியமும், இரண்டாவது விலைவாசிக்கு ஆதிபத்தியமும், மூன்றாவது மேகங்களுக்கு யஜமானத்துவமும் ஆக மூன்று ஆதிபத்தியம் கிடைத்தபடியாலும் அயன பிரவேச காலத்தில் ராஜாவான சநியால் பார்க்கப்பட்டு சநி வீட்டிலேயே இருந்து வருவதாலும், சநி செவ்வாய்க்கு மாத்திரம் அதிகமான ஆதிபத்தியங்கள் ஏற்பட்டபடியால் இவ்வருஷம் தக்ஷிணாயனத்தில் தக்ஷிண பூமி, புண்ணிய பூமிகள் தவிர, மற்ற தேசங்கள் எல்லாம் கபந்தங்கள் கூத்தாடும்படியாகவும் வர்ணிக்கக்கமுடியாத செயல்கள் ஏற்படும் என்பதை கிரகங்கள் சூசனையாக தெரிவிக்கின்றன. அதில் முக்கியமாக

க. வர்க்கம், க. கா. கி. கீ. கு. 5 எழுத்து

ட. வர்க்கம். ட. டா. டி. டீ, டு.

த, வர்க்கம். த. தா, தி. தீ. து.

மேற்படி அக்ஷரங்கள் ஆதியாய் உடைய தேச கிராம நகரங்கள் பாதிக்கப்படும். சகல சிரமங்களையும் கடவுள் மறைமுகமாய் சஞ்சரித்துக்கொண்டு அன்பர்களையும் ஆஸ்திக தேசங்களையும் காப்பார்.

# கீல்வாதம்

(Rheumatism)

## டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

(மலர் 30, இதழ் 7, பக்கம் 392 இன் தொடர்ச்சி)

## அதிதீவிர கீல்வாதம்

அறிகுறிகள் :-

இது கீல்வாதத்தை அனுசரித்தே மேலும் மேலும் அதிகமாக அபிவிருத்தி அடைந்து அதிதீவிரமாக ஆவதும் உண்டு. சாதாரணமாய் எவ்விதத் தொடர்பு இல்லாமலும் இந்த ரோகம் வருவதும் வழக்கம். பிரமேகம் (Gonorrhocal Rheumatism) உடையவர்களுக்கும் இந்த கீல்வாதம் ஏற்படுவது சர்வ சாதாரணம். இதற்கு சுரம் சாதாரணமாகவே காணப்படும். ஆனல் இரவில் மட்டும் அதிக வலியும் அதனல் நித்திரை கெடுவதும் ஏற்படும். இந்தக் கீல்வாதத்தை இரண்டு மூன்று வகையாகப் பிரிப்பதும் உண்டு. இடுப்பில் கண்டால் இடுப்பு வலி, இடுப்பு பிடிப்பு, (Lumbago) ஏற்படுவதும் உண்டு. இதில் இடுப்பின் ஒருபக்கத்திலாவது, இரண்டு பக்கங்களிலாவது சிவந்து அதிக வலியை உண்டாக்கும். இது அதிகப்பட்டால் வியாதிஸ்தர்கள் அசையாமல் படுத்த படுக்கையாக இருக்கச் செய்ய வேண்டும். தொடையின் பின்புறத்தில் வாதம் (Seiatica) கண்டால் தொடை நரம்புகளில் வலி உண்டாகும். மார்பு பக்கமும் நடுமுதுகின் முள்ளன் தண்டின் பக்கமும் உபத்திரவம் ஏற்பட்டால் உரோவாத ரோகம் (மூச்சுப்பிடிப்பு. Pleurodynia) ஒவ்வொரு தசை நார்களிலும் வலி உண்டாகும். உடல் பூராவும் தாளமுடியாத வலி உண்டாகும். வாதரோகத்தைச் சித்த வைத்தியத்தில் 80 வகையாக பிரித்திருக்கின்றார்கள்.

சிகிச்சை :-

கீல்வாத ரோகத்திற்கு என்ன சிகிச்சை செய்தோமோ அதையே திருப்பிச் செய்யவேண்டும். அத்துடன் அயவீர செந்தூரம், வீர மெழுகு, ஆறுமுக செந்தூரம் போன்ற மருந்து

களை சாப்பிட்டு தினம் 2 அவுன்ஸ் முடக்கத்தான் சமூலம் இடித்து சார்பிழிந்து 1 வாரம் அல்லது 15 நாள் சாப்பிட இந்த ரோகம் அறவே நீங்கும். மேலுக்கு மீன் எண்ணெ, சிங்கோன, டர்பன் டைன், வேப்பஎண்ணெ, ஆகியவைகளைத் தடவி ஒத்தடம் கொடுப்பது நல்லது. இவற்றிற்கு வேது பிடிப்பதும் உண்டு.

ஊமத்த இலையை வதக்கி வேப்பஎண்ணெ தடவி வலி உள்ள இடங்களில் போடலாம். இந்த வியாதியஸ்தர்கள் உஷ்ணத்தை உண்டாக்கக் கூடிய கம்பளி சட்டை அணிவது நல்லது. வெந்நீரில்தான் ஸ்நானம் செய்யவேண்டும், இந்த வியாதி சுகமடைந்துவிட்டது என்று சும்மா இருக்கக்கூடாது. அடிக்கடி வந்து தொல்லைகொடுக்கும். முன்போலவே அடிக்கடி சிகிச்சை செய்தால் அறவே நீங்கிவிடும்.

## நோயாளியின் குறிப்பு

26—1—71

தஞ்சாவூர்

எனது குழந்தை சௌ: அகிலாவை, சென்ற நவம்பர் மாதம் முதல் வாரத்தில் எனது வளர்ப்பு நாய் கடித்துவிட்டது. டி நாய்க்கடிக்கு நவம்பர் மாதம் கடைசி வாரத்தில் டாக்டர். ராமகிருஷ்ணன் அவர்கள் மருந்து கொடுத்து மூன்று வேளை சாப்பிடச்சொன்னார்கள். அதன்படி டி மருந்தைக் கொடுத்ததில் வைத்தீஸ்வரன் கருணையால் டாக்டர் அவர்களின் நல்லமனதுப் படி டி நாய்க்கடி குணமாகிவிட்டது.

மறுபடியும் ஜனவரி 20-ந் தேதி அதே நாய் கடித்துவிட்டது மறுபடியும் டாக்டர் அவர்கள் மருந்து கொடுத்திருக்கிறார்கள். டி நாய்க்கடி மருந்து ஆச்சர்யப்படத்தக்க விதத்தில் வேலைசெய் கிறது. டாக்டர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அவர் இச்சேவையைப் பொதுமக்களுக்குத் தொடர்த்து செய்ய எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து அருள வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

M. Srinivasan, B. com.,
District Inspector of C. F. accounts
No. 268 Baloba Lane Tanjore.